# எரிமலை

www.tamilarangam.net

RAYA
87 RUE DE COLOMBES
92600 ASNIERES SUR -
SEINE ; FRANCE

கலை பண்பாட்டு அரசியல் சமூக ஏடு
ஆனி 1992



அஞ்சிடா நெஞ்சன்! யார்க்கும்
அடங்கிடா வீரன்! இன்று
வெஞ்சமர் களததில் நின்று
வென்றிடும் தலைவன்! எங்கள்
பிஞ்சுகள் புலியாய் மாறிப்
போர்க்களம் போகச் செய்தோன்
நஞ்சுடன் நிமிர்ந்து நிற்கும்
நாயகன் நாமம் வாழ்க!

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



எதிரியின் ஆயுதம்
மக்கள் பார்வைக்கு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# உள்ளே மலர்பவை



## பதிவுகள்

1987 - 89 காலப் பகுதியில் (இந்திய இராணுவம் நிலை கொண்டிருந்த காலம்) நிகழ்ந்த மரணங்களில் 5,785 மரணங்கள் மட்டுமே பதிவில் உள்ளன.

இக்காலப் பகுதியில் 12,000 இற்கு மேற்பட்ட மரணங்கள் நிகழ்ந்திருப்பதாக உத்தேசிக்கப்படுகிறது. ஆனால் அவற்றில் அரைவாசிகூடப் பதிவில் இல்லை என்பது ஆய்வில் இருந்து தெரிய வருகிறது.

..... 03



## எழுச்சி

இன்று, மீளவும் தமிழீழத் தேசிய விடுதலைப் போராட்டத்தில் பெண்கள் சங்ககாலத்து வீரத்தையும், சோழர்காலத்து பெருமைகளையும் புறங்காண வைக்கக் கூடிய வகையில் தமிழீழ மண் மீட்புக்காக ஆயுதமேந்தி "தமிழீழ விடுதலைப் புலிகள் மகளிர் அணி" என்னும் பேரியக்கமாக நிற்கின்றனர்.


..... 05



## தடை

இந் நடவடிக்கைகளுக்கான காரணங்களை நாம் ஆராய்ந்தால் பலதர வீச்சுக்களில் இருப்பதைக் காணலாம். அந்நாட்டு அரசியலிலிருந்து சர்வதேச அரசியல் வரை இவ்வீச்சு நிற்பதை அவதானிக்கலாம். ஜெயலலிதா கொடுத்த பெரும் நெருக்கடியினால்தான் மத்திய அரசு இத்தகைய முடிவுக்கு தள்ளப்பட்டதாக தோற்றம் தரப்படுகிறது.

..... 13



## சரண்

அமெரிக்கா தனிப் பெரும் வல்லரசாக உருவெடுத்ததுடன், நேருவால் கட்டி வளர்க்கப்பட்ட அணிசேராக் கொள்கை, சோசலிசத் தத்துவம் ஆகியனவற்றைத் தூக்கிக் காற்றில் வீசிவிட்டு அமெரிக்காவின் காலடியில் விழ இந்தியா தயாராய் இருந்தது.

..... 22

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


## எரிமலை

கலை பண்பாட்டு
அரசியல் சமூக ஏடு

பதினோராம் ஆண்டு

ஆனி 1992


# விடுதலையைத் தடைசெய்ய முடியாது.

அரசியல் யதார்த்தம் குறித்த விடுதலைப் புலிகளின் பார்வை தீட்சண்யமானதாகவும், தீர்க்கமானதாகவும் எப்போதும் இருந்து வருவதையே அண்மைக்கால நிகழ்வுகள் மெய்ப்பித்து வருகின்றன. தமிழீழ மக்களின் தேசிய உரிமைகளை அங்கீகரிக்கவோ, அதன் அடிப்படையில், சமாதான ரீதியாகப் பிரச்சனைக்குத் தீர்வு காணவோ ஸ்ரீலங்கா, இந்தியா ஆகிய இரு அரசுகளும் ஒரு போதும் முன்வரப் போவதில்லை என்பது மீண்டும், மீண்டும் நிருபிக்கப்பட்டு வருகின்றது. குறைந்த பட்சம் தமிழரது தாயகத்தை அங்கீகரிக்கவே அவர்கள் தயாராக இல்லை என்பதே கசப்பான உண்மையாகும். சமாதானத் தீர்வுக்கான முயற்சிகளாக பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் உருவாக்கம், தொண்டமானின் திட்டம், கிறிஸ்தவ, பௌத்த குருமார்களின் யாழ் விஜயம், சர்வதேச முன்னெடுப்பு என்பன அமைந்திருந்தன. இவற்றில் சில அரசாங்கத்தின் கண்துடைப்பு முயற்சிகளாகவும், சில ஐக்கிய ஸ்ரீலங்காவினுள், ஒற்றையாட்சி முறையினுள் காணப்படும் தீர்வுக்கான முயற்சிகளாகவும் காணப்பட்டன. ஆயினும், இத்தகைய முயற்சிகளை, முன்னெடுப்புக்களை விடுதலைப் புலிகள் எழுந்தமானமாகத் தூக்கியெறிந்து விடவில்லை. அவை குறித்து கலந்துரையாடவும், பரிசீலிக்கவும், உரசிப்பார்க்கவும் விரும்பினார்கள். விடுதலைப் புலிகள் இவ்வாறான அரசியல் அணுகுமுறையைக் கையாண்டு, அற்ப சலுகைகளை உள்ளடக்கிய இம்முயற்சிகள் கூட சிங்கள இனவாதப் புயலுக்குத் தாக்குப் பிடிக்க முடியாமல் பொல பொலவென்று விழுந்ததை, சர்வ உலகமும் காணக்கூடியதாகச் செய்தனர். தொண்டமானின் யாழ் வருகை அரசாங்கத்தால் தடை செய்யப்பட்டது. பாராளுமன்றத் தெரிவுக் குழுவிற்கு ஸ்ரீலங்காவின் பிரதான கட்சிகளே தமது ஆலோசனைகளை முன்வைக்க வராமையினால், பாராளுமன்றத் தெரிவுக்குழு ஒரு திட்டத்தை அரசாங்கத்திற்கு முன்மொழிய முடியாத நிலை ஏற்பட்டது. இறுதியில், பாராளுமன்றத் தெரிவுக்குழுவிற்குத் தலைமை வகித்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அக்குழுவிலிருந்து விலகிக் கொண்டது. ஸ்ரீலங்கா அரசாங்கம், தீர்வுக்கான திட்டத்தை தான் முன்வைக்காமல், பாராளுமன்றக் கட்சிகளுக்கிடையிலான கருத்தொற்றுமையின் மூலம் தீர்வுத் திட்டம் ஒன்றைக் காணலாம் என்று தான் தப்பித்துக்கொள்ள எடுத்த முயற்சி தோல்விகண்டு வருகின்றது. தற்போது, அரசாங்கம் ஒரு தீர்வுத் திட்டத்தை வைத்து, விடுதலைப் புலிகளுடன் பேசவேண்டிய நிர்ப்பந்தத்திற்கு உள்ளாக்கப்பட்டுள்ளது. பௌத்த பிக்குகளின் யாழ்ப்பாண நல்லெண்ண விஜயமும், தமிழ் மக்களின் நியாயமான அபிலாசைகளை சிங்கள தேசம் உணர்ந்து கொள்ளவில்லை என்பதை ஆணித்தரமாகக் காட்டி உள்ளது. சர்வதேச ரீதியாக சுவிற்சலாந்து, அவுஸ்திரேலியா, சுவீடன் ஆகிய நாடுகள், பல்நாட்டு நிறுவனமான பொதுநலவாய அமைப்பு ஆகியவை, பேச்சுவார்த்தை மூலமாக தீர்வுகாண எடுத்த முயற்சிகளும் ஸ்ரீலங்கா அரசால் நிராகரிக்கப்பட்டுள்ளன. இது தமிழ்த் தேசத்தின் கோரிக்கையின் நியாயத்தை அனைவரும் ஏற்றுக்கொள்ளும் சூழ்நிலையைத் தோற்றுவித்து வருகின்றது.

இச்சாதகச் சூழ்நிலையை குழப்பும் நோக்குடன் இந்தியாவின் செயல்பாடுகள், விடுதலைப் புலிகளுக்கும், தமிழீழ மக்களுக்கும் எதிராக முடுக்கி விடப்பட்டுள்ளன. விடுதலைப்புலிகள் மீது தடை, தமிழ்த் தேசியத் தலைவர் வே. பிரபாகரன் மீது நீதிமன்ற விசாரணை, தலைவரை நாடு கடத்துமாறு ஸ்ரீலங்கா அரசிடம் உத்தியோக பூர்வ கோரிக்கை ஆகியவை, தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்திற்கு எதிரான உச்சக்கட்டத் துரோகமாக நடைமுறைப்படுத்தப்படுகின்றது. தான் தனது நாட்டில் செய்வது போல், தமிழீழ மக்களின் நியாயமான கோரிக்கைக்கு எதிராக ஏனைய நாடுகளும் செயல்பட்டு போரையும், அவலங்களையும் நீட்டிக்க வேண்டுமென்று இந்தியா விரும்புகின்றது. இத்தகைய படு பிற்போக்குத்தனமான, சுயநலமான சதி முயற்சிகளை, சர்வதேச ஆதரவுடன் தமிழர் நாம் ஒருங்கிணைந்து முறியடிப்போம். ■


ஆக்கங்கள்,
அபிப்பிராயங்கள்,
மற்றும் தொடர்புகட்கு:

எரிமலை
தாய்மண் வெளியீடு
தமிழர் ஒருங்கிணைப்புக் குழு
c/o T. C. C - France.
341, Rue des Pyrenees,
75020 Paris.
Tel: 43 58 11 42


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இந்தியப்படை இருந்த காலம் வடக்கில் கூடுதல் மரணங்கள்

## ஆனால் அரைவாசிக்கு மேல் பதிவு இல்லை

**"வடபிரதேசத்தில் அண்மைக்கால இறப்புக்களும் அவற்றுக்கான காரணிகளும்" என்ற தலைப்பிலான கருத்தரங்கு ஒன்று அண்மையில் யாழ். பல்கலைக் கழக புவியியற் துறை மண்டபத்தில் நடை பெற்றது. இக்கருத்தரங்கில் புவியியற்துறை சிரேஸ்ட விரிவுரையாளர் திரு. கா. குகபாலன் ஆற்றிய உரையின் தொகுப்பு கீழே தரப்பட்டுள்ளது.**

வட பிரதேசத்தில் கடந்த 10 ஆண்டுகளாக நிகழ்ந்த மரணங்கள் பற்றிய சரியான தகவல்கள் இறப்புப் பதிவேடுகளில் இல்லை. பதியப்பட்டுள்ள இறப்புகளிலும் அதற்கான காரணங்கள் தெளிவாகக் குறிப்பிடப்படவில்லை.



நெருக்கடியான காலகட்டங்களில் இது போன்ற குறைபாடுகள் ஏற்படுவது தவிர்க்க முடியாதென்பதை ஏற்றுக் கொண்டாலும், அதனுடன் தொடர்புடைய தனிப்பட்டவர்களின் அசிரத்தையும், பொது மக்களிடையேயுள்ள அக்கறையின்மையுமே அந்நிலைக்கு காரணம் என்பது தெளிவாகிறது.

யாழ் நகர் மேற்கு பதிவாளர் பகுதியைப் பெரிதும் அடிப்படையாகக் கொண்டு வடபிரதேசத்தின் ஏனைய மாவட்டங்களின் பதிவாளர் பிரிவுகளின் தகவல்களையும் திரட்டி இந்த ஆய்வு செய்யப்பட்டுள்ளது.

ஆனாலும் மன்னார், வன்னி ஆகிய இரு மாவட்டங்களின் பதிவாளர் பிரிவுகளின் பூரண தகவல்கள் ஆய்வில் சேர்த்துக் கொள்ளப்படவில்லை.

ஆய்வின் படி கடந்த 10 ஆண்டு காலப் பகுதியில் வடபிரதேசத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள மரணங்களின் எண்ணிக்கை 43,941 ஆகும்.

இக் காலப் பகுதியில் அதிக எண்ணிக்கையான மரணங்கள் நிகழ்ந்ததாகக் கருதப்படும் 1987-89 காலப் பகுதியில் (இந்திய இராணுவம் நிலை கொண்டிருந்த காலம்) நிகழ்ந்த மரணங்களில் 5,785 மரணங்கள் மட்டுமே பதிவில் உள்ளன.

இக்காலப் பகுதியில் 12,000 இற்கு மேற்பட்ட மரணங்கள் நிகழ்ந்திருப்பதாக உத்தேசிக்கப்படுகிறது. ஆனால் அவற்றில் அரைவாசிகூடப் பதிவில் இல்லை என்பது ஆய்வில் இருந்து தெரிய வருகிறது.

கடந்த 10 ஆண்டு காலப் பகுதியில் மொத்தமாகப் பதிவு செய்யப்பட்டுள்ள இறப்புகளிலும், மரணத்துக்கான சரியான, தெளிவான காரணங்கள் காட்டப்படவில்லை.

வயோதிபம் இயற்கை மரணம். நோய் அல்ல. உதாரணமாக 40 வயதுக்கு மேற்பட்டவர்கள் பலரது மரணங்களுக்கு காரணமாக "வயோதிபம்" என்பது காணப்படுகிறது. இக்காலப் பகுதியில் இறந்த குழுந்தைகளில் சுமார் 90 குழந்தைகளின் பதிவில் மரணத்துக்கான காரணம் "இயற்கை மரணம்" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் "இயற்கை மரணம்" என்பது ஒரு நோயல்ல. அதேபோல "வயோதிபம்" என்பதும் நோயல்ல. ஆனால் இங்கு பெரும்பாலான மரணங்களுக்கு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இவையே காரணம் காட்டப்படுகின்றன.

வயோதிபர்கள் பெரும்பாலும் வீடுகளில் இறப்பதாலும் நோய்க் காரணிகள் தெரியாமல் போய் விடுகின்றன. மரணத்தை பதிவு செய்ய உரித்துடையவர்கள் வெளி நாடுகளில் வாழ்கின்ற சூழலினாலும் ஏராளமான மரணங்கள் பதியப்படுவதில்லை.

சில இடங்களில் "ஆள் போய்விட்டது. பதிவு எதற்கு?" என்ற மனோபாவத்தினாலும் மரணங்கள் பதியப் படுவதில்லை. வயோதிபத்தினால் ஏற்படும் மரணம், துப்பாக்கி, குண்டு வீச்சு, தற்கொலை, கொலை, இருதய பலவீனம், புற்று நோய், போசாக்கின்மை, குடல், மூளை, சலரோகம், ஈரல் சம்பந்தமான நோய்களால் ஏற்படும் மரணங்கள், குழந்தை இறப்பு எனப் பல்வேறுபட்ட பிரிவுகளில் இந்த ஆய்வு செய்யப்பட்டுள்ளது.

## தகுதியில்லாத பதிவாளர்கள்

வடபிரதேசத்தில் கடந்த கால இறப்புப் பதிவேடுகளில் காணப்படும் குறைபாடுகளுக்குப் பல்வேறு நிலைமைகள் காரணங்களாக உள்ளன. அவற்றில் பிரதானமானது பதிவாளர்களின் தகுதியின்மை. தனிப்பட்ட மற்றும் அரசியல் செல்வாக்குகளினால் தகுதியில்லாத பலர் பிறப்பு, இறப்பு பதிவாளர்களாக நியமனம் பெற்று வருகின்ற நிலை காணப்படுகிறது.

மரணத்துக்கான உண்மையான காரணியைத் தெரிந்து கொள்கிற அளவுக்காவது பதிவாளர் வைத்திய அறிவைக் கொண்டிருக்க வேண்டும். இக்குறைபாட்டை தவிர்க்க குறைந்தது உதவி வைத்திய அதிகாரி தரத்தில் உள்ளவர்கள் பதிவாளர்களாக நியமிக்கப்பட வேண்டும். மேலும் இறப்புப் பதிவுக்கு ஆகக் குறைந்தளவு கொடுப்பனவே வழங்கப்படுகிறது. இதுவும் அந்த விடயத்தில் அசிரத்தைப் போக்கை ஏற்படுத்துகிறது.

கடந்த காலங்களில் கொல்லப்பட்டவர்களில் பலர் காணாமற் போனோர் பட்டியலிலும் இருக்கிறார்கள். மற்றும் அரசியல் காரணங்களுக்காக கொல்லப்பட்டவர்கள், துப்பாக்கிச் சூட்டினால் கொலையுண்டவர்களின் இறப்புக்களைப் பதிவதில் உரித்துடையவர்களிடையே பய உணர்வு காணப்படுகிறது. இவையும் கடந்த கால மரணங்கள் பதியப்படாமைக்குக் காரணங்களாக உள்ளன.

இராணுவ நடவடிக்கைகைளால் மக்கள் தமது பதிவுப் பிரிவுகளில் இருந்து இடம் பெயர்ந்தமை, மற்றும் பதிவாளர்கள் இடம் பெயர்ந்து வாழ்கின்றமை போன்றனவும் இறப்புப் பதிவில் உள்ள குறைபாடுகளுக்கு காரணமான வேறு நிலைமைகள்.

இறப்புப் பதிவின் அவசியம் பற்றிய விழிப்புணர்வு மக்களிடையே இல்லாமை, சமூக பண்பாட்டு பிரச்சனைகளால் மரணங்களுக்கான உண்மைக் காரணிகளை மறைத்தல் போன்றனவும் பதிவேடுகளில் காணப்படும் குறைபாடுகளுக்கு ஏதுவான பிற காரணிகளாக இருக்கின்றன.

இவை தவிர நிவாரணங்களைப் பெற்றுக் கொள்வதற்காகச் சிலர் இறப்புக்கான காரணிகளை மாற்றிப் பதிதல், உயிருடன் வாழ்கின்றவர்களும் இறப்புப் பதிவில் காணப்படுதல் போன்ற காரணிகளால் வடபிரதேச இறப்புப் பதிவில் குழறுபடிகள் ஏற்பட்டு வருவதும் சுட்டிக் காட்டப்படுகிறது.

இறப்புப் பதிவுப் படிவங்களில் காணப்படும் சில குறைபாடுகளும், மேலதிக சில விடயங்கள் அத்துடன் , இணைக்கப்பட வேண்டிய அவசியமும் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்பட வேண்டியவையே.

கடந்த 10 ஆண்டுகளில் பதிவான மரணங்களின் எண்ணிக்கையை வைத்துக் கொண்டு தயாரிக்கப்பட்ட ஒரு புள்ளி விபரத்தில் நோர்வே நாட்டில் ஆயிரத்துக்கு ஒன்பது வீதம் காணப்படும் இறப்பு வீதம், யாழ்ப்பாணத்தில் ஆயிரத்துக்கு ஐந்து வீதமாகக் காணப்படுகிறது.

இதனைப் பார்க்கும் போது இங்கு இறப்பு வீதம் குறைந்து வருவது போல தெரிந்தாலும் அவற்றில் உண்மை இல்லை.

பதிவுகளில் உள்ள குறைபாடுகள், பிழையான புள்ளி விபரங்கள் உருவாக வழி வகுக்குகின்றன. ■

## தேசியத்தலைவர் வே.பிரபாகரனின் அறை கூவல்



எமது போராட்டம் விரைவில் வெற்றிபெற உலகத்தமிழ் மக்களின் பங்கு அவசியம். எமது போராட்டத்தின் நியாயங்களை உலகம் முழுவதற்கும் எடுத்துச் சொல்லல் வேண்டும். இது தவிர தொழில் நுட்பத்துறை வல்லுநர்கள், வைத்தியத்துறை வல்லுநர்கள், மற்றும் ஏனையதுறை வல்லுநர்களும், பிறருக்குப் பயன்படாமல் மறைந்து போய்விடக்கூடிய தமது அனுபவங்களையும் அறிவையும் எம்மோடு பகிர்ந்து கொள்ளவேண்டும் என்பதோடு எமது போராட்டத்தின் வளர்ச்சிக்கு உதவவும் வேண்டும். நாம் எந்த சக்தியின் துணையுடனும் நின்று போராடவில்லை. எமது மக்களின் துணையோடு போராடுகின்றோம். அதனால் நிமிர்ந்து நிற்கின்றோம். இன்று உலகில் வாழும் 8 கோடி தமிழ் மக்களுக்கும் ஓர் நாடு கிடையாது. தமிழீழம் என்பது முடிந்த ஒரு முடிவு. எமது இலட்சியத்திற்குக் குறுக்கே எந்த சக்தியும் வருவதை நாம் அனுமதியோம். எமது மக்கள் தான் எமது பலம். நாளை அமையப் போகும் நமது தேசத்திற்காக ஒன்றிணைந்து போராடுவோம்.

www.tamilarangam.net




# தமிழ்ப் பெண்களும் புரட்சி மனோபாவமும்

பற்றிமாகரன்

தமிழர்களுடைய மானிடவியல் -சமூகவியல், தன்மைகளை ஆராய்ந்த ஆராய்வாளர்கள், திராவிட இனத்தின் தொல்குடிகளான தமிழர்கள், தாய் வழிச் சமூக அமைப்பைக் கொண்டிருந்தார்கள் எனத் தெளிவுபடுத்தியுள்ளனர். இத்தாய்வழி சமூக அமைப்பில் பெண்களே விவசாயம் செய்தனர். கிரேக்கரிடையிலும் திராவிடரிடையிலும் இவ்வாறு பெண்களே விவசாயத்தில் முதன் முதலில் ஈடுபட்டனர் என்பது மானிடவியல் -சமூகவியல் ஆய்வாளர்களது துணிபு. இக்காலகட்டத்தின் வெளிப்பாடாகவே முருகன் -வள்ளி கதையும் கருதப்படுகிறது. வீட்டருகே கிழங்கு, தினை போன்ற ஆழமில்லா பயிர்ச் செய்கைகளை நடத்தியவர்கள் பெண்களே. இவ்வாறு தாய்வழிச் சமூக அமைப்பு இடம்பெற்றதன் விளைவாக சொத்துடமை மேலான ஆதிக்கம் ஆரம்பத்தில் பெண்களிடமே இருந்து வந்துள்ளது. சொத்துடமை காரணமாக குடும்பத்தின் ஆட்சிப் பொறுப்பும் பெண்ணிடமே இருந்து வந்துள்ளது. இதனாலேயே திருமணத்திற்கு ஆண்களை தேர்ந்தெடுக்கும் பொறுப்பு பெண்ணின் தாயாரின் உரிமையாக பல குலக் குழுக்களிடையே காணப்பட்டுள்ளது. இத்தன்மை 19 ஆம் நூற்றாண்டின் ஆரம்பம்வரை மட்டக்களப்பு பகுதிகளில் தொடர்ந்து வந்துள்ளமையை ஆய்வுகள் எடுத்துக் காட்டுகின்றன. யாழ்ப்பாண பிரதேசத்தில் காணப்படும் தாய் மாமனுக்கு (அம்மான்) முக்கியத்துவம் கொடுக்கும் வழமை உட்பட தமிழகத்தில் மாமனைத் திருமணம் செய்யும் சம்பிரதாயம் வரை அனைத்துமே தாய் வழிச் சொத்து, குலக்குழுவை விட்டு வெளியே போகக் கூடாதென இருந்து வந்த குலக்குழுக் கட்டுப்பாட்டு முறையின் எச்சசொச்சங்கள் என்றே கூற வேண்டும். எனவே தமிழர் சமுதாய அமைப்பின் ஆரம்பத்தில் தமிழ்ப் பெண்கள் சமூக முக்கியத்துவம் வாய்ந்தவர்களாக விளங்கியுள்ளனர். ஆரம்ப சமுதாயத்தில் குலக்குழுக்களின் பாதுகாப்புக்கும் ஆட்சிக்கும் பொறுப்பாக இருந்த தமிழ்ப் பெண்கள், ஆரம்ப வீர புருடர்கள் தெய்வங்களாக போற்றப்பட்டுள்ளனர் என்ற வரலாற்றுப் பொதுமைக்கேற்ப பின்னர் தெய்வநிலை பெற அதுவே தாய் வழித் தெய்வங்கள் தமிழரிடை நிலை பெறக் காரணமாயிற்று. அதிலும் சிறப்பாக வீரத்தின் திருவுருவாய் "கொற்றவை" வழிபாடு தமிழரின் முதன்மை மதவழிபாடாக மாற இதுவே காரணமாயிற்று.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஆயினும் பெண்களின் விவசாயப் பொருளாதாரத்தின் கட்டமைப்பு, பெரு நிலப் பரப்புக்களை, காளை மாடுகளை கொண்டு உழும் தொழில் நுட்பம் கண்டு பிடிக்கப்பட்டதை அடுத்து உடல் வலிமையின் தேவை குறித்து ஆண்களிடம் சென்றடைந்தது. அது மட்டுமல்லாமல் ஆண்கள் கற்காலம் முதல் வேட்டைத் தொழில் நடாத்தி வந்ததினால் புவியியல் நிலைப் பாடுகளைக் கண்டு பிடித்து பாரிய நிலங்களைப் பயிரிடக் கூடிய அறிவியல் வளர்ச்சியினை பெற்றிருந்தமையினால் பெரு நிலப் பரப்பு விவசாயத்துக்கு உட்பட்டதும் ஆணாதிக்க சமுதாயம் மலரத் தொடங்கியது. இக்காலகட்டத்திலேயே அதுவரை மிருகங்களின் உயிர்க் கொலை குறித்து கருணைத் தத்துவம் பேசாத மனிதர்கள், மிருகங்களின் விவசாயத் தேவை கருதி, உயிர்கள் பற்றிய கருணைக் கோட்பாடுகளை உருவாக்கத் தொடங்கினர். உதாரணமாக புத்தரின் கோட்பாடுகளைக் குறிப்பிடலாம். கருணை, அன்பு என்னும் கருத்துக்கள் முக்கியத்துவம் பெறத் தொடங்கியதும், பெண்ணின் தாய்மை உணர்வுக்கு முக்கியத்துவம் கொடுத்து அவளுக்கு குடும்பம் மட்டும்தான் பொறுப்பு என்ற நிலைக்கு தள்ளிவிட்டது.

பொருளாதார முறைமைகள் ஆண்களுக்கு சாதகமான முறையில் வளர வளர சமுதாயத்தில் பெண்கள் மேல் கட்டுப்பாடுகள், ஒதுக்கல்கள், மத, பண்பாடு, மொழியியல் பரிமாணங்களூடாகவும் வலுப்படுத்தப்பட்டன. இதனாலேயே "பொய்யும் களவும் தோன்றிய பின்னர் ஐயர் வகுத்தனர் கரணம்" என்று தொல்காப்பியர் அழகாகக் கூறினார். தாலிகட்டும் கல்யாண முறைமைகளையே "கரணம்" என்று தொல்காப்பியர் குறிப்பிட்டார். அவ்வாறே பெண்களின் விவசாயச் செய்கை காலத்தில், குறிஞ்சி நிலத்தினுடைய ஒழுக்க நெறியாக "களவு" கூறப்பட்டுள்ளது. அதாவது இங்கு "களவு" என்பது ஆண் பெண்ணுக்கிடையே உள்ள சுதந்திரமான பாலியல் நடத்தைகளைக் குறிக்கிறது. ஆனால் ஆடு மாடுகளை மேய்க்கத் தொடங்கிய அடுத்த காலகட்டத்தில் "முல்லைக்குரியது கற்பு" எனக் கற்புக் கோட்பாடு உருவாக்கப்பட்டதனால் பெண்ணின் நடத்தைகள் மேல் கடுமையான கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்ட அதே நேரம் ஆணுக்கு தாராளாண்மை அளிக்கப்பட்டது. இதே கால கட்டத்தில் தமிழகத்தில் சமண -பௌத்த மதங்களும் தனிச் செல்வாக்கு செலுத்தத் தொடங்கின. இதன் விளைவாக குடும்ப அமைப்பு என்பதே இல்லாத நிலையில் வாழ்வு நிலையற்றது, உடல் பொய்யானது என்ற தத்துவங்கள் பேசப்பட்டு முறைமையான குடும்ப உறவுத் தன்மை கேலிக் கூத்தாக்கப்பட்டது. இதனால் தாய் தந்தை யாரென்று தெரியாத பல்லாயிரம் குழந்தைகள் கைவிடப்பட்ட நிலையில் அனாதரவாக காட்டிலும், தெருவிலும் வீசப்பட்டன. இதனாலேயே தமிழிலக்கியங்களில் பலர் மண்ணில் -ஆற்றில் கிடந்தெடுக்கப்பட்டனர் என்ற கருத்துக்கள் இடம் பெற்றுள்ளன. அத்தோடு வள்ளுவர் முதல் அவ்வையார் வரை பலர் சகோதரர்களாக கூறப்பட்டும் உள்ளனர்.

## பெண்களும் வள்ளுவர், இளங்கோவும்

தமிழ் இலக்கிய நூல்களில் பழமை வாய்ந்ததாக காணப்படும் தொல் காப்பியம் -திருக்குறள் -சிலப்பதிகாரம் போன்றவை பெண்களிடையே புரட்சிப் போக்கை அவாவி நிற்கின்றன. தொல்காப்பியம், பகுத்தறிவு உள்ளன (ஆண்-பெண்) உயர்திணை என்கிறது. இதன் மூலம் பெண்ணும் ஆணுக்குச் சமமான இடத்தில் வைக்கப்படுகிறாள். ஆனால் இதற்குச் சமகாலத்தவையான அரிஸ்டாட்டிலின் கிரேக்க சிந்தனைகளில் எல்லாம் பெண் ஒரு சொத்தாகவே (Property) கருதப்படுகிறாள். மகாபாரதத்தில் திரௌபதை சூதாட்டத்தில் பணயப் பொருளாகக் கருதப்பட்டதும் பெண் ஒரு சொத்தென்ற அடிப்படையிலேயே!

திருவள்ளுவர் காமத்துப்பாக்கு முக்கியத்துவம் கொடுத்து குடும்ப அமைப்பின் தேவையின் நியாயப்பாடுகளை உறுதி செய்கிறார். இதன் இலக்கிய வடிவமாகத் திகளும் சிலப்பதிகாரத்தில் இளங்கோ "உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏற்றலும் அரசியல் பிழைத்தார்க்கு அறல் கூற்றாவதும்" என்ற கருத்தை வெளிப்படுத்தும் போராட்டப் பாத்திரமாக கண்ணகியை வெளிக் கொணர்கிறார்.

## முதலாவது பெண் புரட்சி

ஆயினும் நடை முறையில் புனிதவதி என அழைக்கப் படும் "காரைக்காலம்மையாரின்" புரட்சி மூலமே தமிழகத்தில் தமிழர்களின் தலை விதியே மாற்றியமைக்கப்படுகிறது. சமணமத வணிகனான தனது கணவன் தன்னைக் கைவிட்டுச் சென்றதும் "புனிதவதி" பெரும் புரட்சி ஒன்றுக்கு தயாராகிறாள். தமிழகமெங்கும் அலைந்து திரிந்து தமிழ் நாட்டின் அரசியல் -சமூக விரோத சக்தியாக நின்ற சமண மதக் கருத்துக்களை தவிடுபொடியாக்குகிறாள். சுடலையைக் காட்டிக் காட்டி மரணத்தைப் பற்றிப் பேசி வாழ்வு நிலையற்றது என மக்களை இயக்கத் தன்மையற்றவர்களாக மாற்றியமைக்கு மாறாக "சுடலையில் தான் ஆன்மாவும் இறைவனும் இரண்டறக் கலப்புற முடியும். எனவே இறைவன் இங்கு ஆனந்த தாண்டவமாடுகிறான். ஆகவே மரணத்திற்கு அஞ்சத் தேவையில்லை" எனக் கூறி ஈமப் புறங்காட்டை புறங்காணும் வலிமையை தமிழக மக்களுக்கு ஊட்டுகிறாள். இந்தப் புரட்சித் தலைவியின் வழியிலேயே சமய மறுமலர்ச்சிக்கூடாக சோழ சாம்ராஜ்ஜியம் உருவானது.

## மொத்தத்தில் அடக்குமுறையே

காரைக்காலம்மையார் மூலம், ஒரு பெண்ணின் மூலம் தமிழக வரலாறு திருப்பு முனையைப் பெற்றிருப்பினும் தமிழகத்திலே பெண்ணடிமைத்தனம் தொடர்ந்து வலுப் பெற்றே வந்தது. ஆயினும் கருத்தியலில் பெண்ணைத் -தாயைத் தெய்வமாகப் போற்றும் மரபு சமுதாய நெறியாகியது. இதனால் தாய் என்ற

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஸ்தானத்தின் மூலம் பெண் போற்றப்பட்டாளே தவிர ஆணும் பெண்ணும் சமமானவர்கள் என்ற கருத்து உருவாக்கப்படவில்லை. கல்வி மறுக்கப்பட்டவளாக, இன்பப் பொருளாக, குழந்தை பெறும் இயந்திரமாக, சகல வேலைகளையும் செய்ய வேண்டிய குடும்ப அடிமையாகவே கருதப்பட்டாள். அந்நியர் வரவால் பெண்ணடிமைத்தனத்தின் வடிவம் சிறிது மாற்றம் பெற்றது. அவள் நாகரிகமான முறையில் குடும்பத்துக்கு உழைப்பை வழங்கும் காரணியாகவும் சேவை விரிவு பெற்றாள். மயூரம் வேதநாயகம்பிள்ளை, பாரதி போன்றவர்களின் பேச்சு, எழுத்துக்களிலே பெண்ணடிமைத்தனத்தின் கேவலங்களைத் தெளிவாகக் காணலாம்.




## வள்ளியம்மாளும் அன்னை பூபதியும்

ஆயினும் சேர-சோழ-பாண்டிய அரசுகளில் பெண்கள் முக்கிய பங்குகளை வகுத்துள்ளனர். சிலர் அரசின் நெறிப்படுத்தாளர்களாகவும் விளங்கியுள்ளனர். ஏன், தமிழகப் பெண்ணான வள்ளியம்மாள் என்பவரின் மன உறுதியிலேயே காந்தி கூட சத்தியாக்கிரகம் என்றால் என்ன என்பதைக் கண்டு உணர்ந்தார். இன்று மட்டக்களப்பு அன்னை பூபதி, தமிழ்ப் பெண்களின் மன உறுதியின் குறியீட்டுச் சின்னமாகி தமிழீழத்தின் நியாயப்பாட்டை உலகுக்கு உணர்த்தி நிற்கிறாள்.

## ஆயுதப் போராட்டமும் பெண்களும்

தமிழக வரலாற்றிலே ஆயுதப் போராட்டத்தின் மூலம் அரசுகளைக் காப்பாற்றிய பெண்கள் பலரைச் சேர-சோழ-பாண்டிய வரலாறுகள் காட்டுகின்றன. அத்துடன் மாமன்னர்களின் அரசியல் ஆலோசகர்களாகவும், அரசுகளின் நெறிப்படுத்தாளர்களாகவும் பெண்கள் விளங்கியுள்ளனர். இன்று, மீளவும் தமிழீழத் தேசிய விடுதலைப் போராட்டத்தில் பெண்கள் சங்ககாலத்து வீரத்தையும், சோழர்காலத்து பெருமைகளையும் புறங்காண வைக்கக் கூடிய வகையில் தமிழீழ மண் மீட்புக்காக ஆயுதமேந்தி "தமிழீழ விடுதலைப் புலிகள் மகளிர் அணி" என்னும் பேரியக்கமாக நிற்கின்றனர். இவர்கள் வெறும் ஆட்சி மாற்றத்திற்காக மட்டும் போராடவில்லை. தமிழீழ விடுதலைப் புலிகளின் அடிப்படைக் கொள்கையான "பெண் விடுதலை"யை உறுதிப்படுத்தும் கருவிகளாகவும் திகழ்கின்றனர். ஆணும் பெண்ணும் சமமானவர்கள் என்பதன் நடைமுறை உதாரணங்களாக விளங்குகின்றனர். சமீபத்தில் நடைபெற்ற மாங்குளம் இராணுவ முகாம் தகர்ப்பில்கூட அவர்கள் தாம் எடுத்துக் கொண்ட பணிகளைச் செம்மையாகச் செய்து இராணுவரீதியான சமத்துவத் தன்மையை நிரூபித்துள்ளனர். அதே வேளை புனர் வாழ்வு, புனர் நிர்மாண வேலைகளில் சேவைச் செம்மல்களாகவும் குடும்பத்தில் தாயாகவும், சகோதரியாகவும், மனைவியாகவும் திகழ்கின்றனர். இப்பெண்கள் "அடக்கு முறையற்ற சமுதாயம்" ஒன்று உருவாக்கப்படவேண்டும் என்ற நோக்கில் தம்மை முழுமையாக அர்ப்பணித்து வருகின்றனர். இவ்வகை அடக்குமுறையற்ற சமுதாயம் ஒன்று உருவாக்கப்படவேண்டும் என்ற இவர்களின் நோக்கத்தை தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் செவ்வனே நிறைவேற்றிக் கொண்டு இருக்கின்றது. ■




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



யாழ். விஜயம் செய்த பௌத்த பிக்குகள் விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட விசேட அதிரடிப் படைப்பிரிவின் பாதுகாப்புடன், ஸ்ரீலங்காப் படையால் நாசமாக்கப்பட்ட பகுதிகளையும், ஸ்ரீலங்காப் படைகளிடம் இருந்து விடுதலைப் புலிகளால் மீட்கப்பட்ட யாழ். கோட்டையையும் பார்வையிடுகின்றனர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஸ்ரீலங்கா இராணுவம், ஆக்கிரமிக்கப்பட்டுள்ள தமிழீழப் பகுதிகளில் வாழும் தமிழ் மக்களுக்கு விசேட அடையாள அட்டைகளை வழங்கியுள்ளது. இவ் அடையாள அட்டைகளை எந்த நேரமும், எங்கு சென்றாலும் வைத்திருக்க வேண்டும். தவறுதலாக அதனை வைத்திருக்காதோர் கைது செய்யப்படுவதும், தாக்குதலுக்குள்ளாக்கப்படுவதும், தடுப்பு முகாம்களுக்கு இட்டுச் செல்லப்பட்டு சித்திரவதைக்கும் உள்ளாக்கப்படுகின்றனர். அடையாள அட்டைகளை பரிசீலனை செய்வதிலும், சந்தேக நபர்கள் எனக் காட்டிக் கொடுப்பதிலும், தாக்குதலிலும் இராணுவத்திற்கு சில தமிழ்க் குழுக்களை சேர்ந்தோர் உதவி வருகின்றனர். ஆகியோர், உடனடியாக சுடப்படும் சம்பவங்களும், முகாம்களுக்கு கொண்டு செல்லப்பட்டு காணாமல் போகும் சம்பவங்களும் இடம் பெறுகின்றன. சுடப்படுவோர் சண்டையின் போது கொல்

**அடையாள அட்டைகளை பரிசீலனை செய்வதிலும், சந்தேக நபர்கள் எனக் காட்டிக் கொடுப்பதிலும், தாக்குதலிலும் இராணுவத்திற்கு சில தமிழ்க் குழுக்களை சேர்ந்தோர் உதவி வருகின்றனர்.**

# அடையாள அட்டைமுறை

# பாசிச அடக்குமுறை

**வளவன்**

செய்யப்படுதலும், காணாமல் போதலும் இடம் பெற்று வருகின்றன. கடந்த 20 மாதங்களில் மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் மாத்திரம், ஏழாயிரத்துக்கு மேற்பட்ட தமிழர் கொல்லப் பட்டுள்ளதுடன், ஆறாயிரத்திற்கு மேற்பட்ட இளைஞர்கள், கைது செய்யப்பட்டு தடுப்பு முகாம்களுக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளனர். கொண்டு செல்லப்பட்டோரின் விபரங்களை வெளியிடவும் அரசாங்கம் மறுத்து வருகின்றது. அவர்கள் இருக்கின்றார்களா, எங்கு வைக்கப்பட்டுள்ளார்கள் என்பதே தெரியாதுள்ளது. முகாம்களுக்கு சென்று விசாரிக்கும் உறவினர்களுக்கு, குறிப்பிட்டவர்கள் பற்றி தமக்கு எதுவும் தெரியாது என்றும், அவர்கள் யாரால், எப்போது கைது செய்யப்பட்டார்கள் என்பதே தெரியாது என்றும் இராணுவ அதிகாரிகள் கூறி வருகின்றார்கள். சில வேளைகளில் இரண்டு தினங்களுக்கு ஒரு முறை, தமிழ்க் கிராமங்கள் சுற்றிவளைக்கப்படுகின்றன. சந்தேகத்திற்கு உள்ளானோர், முகமூடிகளால் காட்டிக் கொடுக்கப்படுவோர், அடையாள அட்டைகள் இல்லாதோர் லப்பட்ட "பயங்கரவாதிகள்" என்றோ, சண்டையில் இடைநடுவே சிக்கி இறந்த பொது மக்கள் என்றோ வரையறுக்கப்படுகின்றனர்; கொழும்புப் பத்திரிகைகளால் வர்ணிக்கப்படுகின்றனர்.

இராணுவத்தின் பிடிக்குள் சிக்கியுள்ள மக்கள் மாலை 6 மணிக்குப் பின்னர் வீடுகளை விட்டு வெளியேறுவதற்கு இராணுவம் தடை விதித்துள்ளது. இவ்வாறு வெளியேறுபவர்கள் பலமாக தாக்கப்பட்டு காலை வரை மின் கம்பத்தில் கட்டி வைக்கப்படுகின்றனர். மிக அவசரம் என்றால் மட்டும், தீப்பந்தத்துடன் வெளியேறலாம் என்று இராணுவம் கட்டளையிட்டுள்ளது. வீடுகளுக்கு உறவினர்கள் செல்வதையும் இராணுவம் தடுத்து வருகின்றது. ஒரு வீட்டிற்கு உறவினர், நண்பர் வருகை தந்தால் 3 மணித்தியாலத்துக்குள் அவரது வருகை இராணுவத்திற்கு தெரியப்படுத்தப்பட வேண்டும். அவ்வாறு செய்யத் தவறுவோர் முகாமிற்கு கொண்டு செல்லப்பட்டு தாக்குதல்களுக்கு

டைகளை பரிசீலனை செய்வதிலும், சந்தேகநபர்கள் எனக் காட்டிக் கொடுப்பதிலும், தாக்குதலிலும் இராணுவத்திற்கு சில தமிழ் குழுக்களை சேர்ந்தோர் உதவி வருகின்றனர்.

15 வயது முதல் 40 வயதுக்கு உட்பட்ட யுவதிகளுக்கும், ஆண்களுக்கும் திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை, வவுனியா ஆகிய மாவட்டங்களில் விசேட அட்டைகள் இராணுவத்தினால் வழங்கப்பட்டுள்ளன. இவ் அடையாள அட்டை வழங்கலுக்கு எவ்வித சட்ட அந்தஸ்த்தும் இருப்பதாக தெரியவில்லை. தமிழ் மக்களுக்கு வழங்கப்படும் இவ் அடையாள அட்டை முறை, இன ரீதியான, மிகக் கொடூரமான அடக்குமுறையாகப் பிரயோகிக்கப்படுகின்றது. தமிழ் மக்களை மிருக நிலையிலும் கேவலமாக மதிக்கும் இவ் அடையாள அட்டை முறை, -பாசிச நாடுகளிலும், நிறவாதத்தை ஸ்தாபனமயப்படுத்திய தென் ஆபிரிக்காவிலும்தான் நடைமுறையில் இருந்தது. நாசி ஜேர்ம

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

னியில் யூதர்களுக்கு எதிராக இத்தகு அடையாள அட்டை முறை நடைமுறைக்கு கொண்டு வரப்பட்டு, இலட்சக் கணக்கான யூதர்கள் கொன்றொழிக்கப்பட்டனர். தென்னாபிரிக்காவில், 1809 ஆம் ஆண்டு கேப் மாகாண ஆளுனரால் பிரகடனப்படுத்தப்பட்ட



விடுதலைப் பாதையில் தென்னாபிரிக்க மக்கள்

அடையாள அட்டை முறை போன்று, 1952ல் தென்னாபிரிக்கா முழுமைக்கும் பன்ரு சட்ட விதியாக (BANTU ACT) அடையாள அட்டை முறை சட்ட அந்தஸ்து கொடுக்கப்பட்டதைப் போன்றும் தமிழீழப் பகுதிகளில் அடையாள அட்டை முறை நடைமுறைப் படுத்தப்படுகின்றது. தென்னாபிரிக்காவில், கறுப்பின மக்களை அடையாளப்படுத்தி அவர்கள் ஓரிடம் விட்டு வேறிடம் செல்லாமலும், பிறிதொரு இடத்தில் குடியேறாமலும், குறிப்பிட்ட வேலைகளையே செய்யுமாறும், வேறிடம் சென்றால் எளிதில் கைது செய்வதற்கும் வசதியாகவே இவ்வடையாள அட்டை முறை தென்னாபிரிக்காவில் நடைமுறையில் இருந்தது. கறுப்பின மக்கள் ஒரே இடத்தில், ஒரே தொழிலில் கட்டுப்பட்டிருக்க வேண்டும் என்ற நோக்கமே தென்னாபிரிக்க அரசாங்கத்திடம் இருந்தது. தென்னாபிரிக்கா, தனது இனவாத சட்டங்களை நீக்கி, இனவாத முறையை அகற்றி வரும் வேளையில், ஸ்ரீலங்கா இனவாத அரசாங்கம் இறுக்கி வருகின்றது.

இந்நடைமுறை மனித கௌரவத்திற்கு இழுக்கானதாக உள்ளது. பாரபட்சமற்ற நடைமுறையாக காட்டப்பட அரசாங்கத்தால் முயற்சி எடுக்கப்படுகின்றதாயினும், தமிழ் மக்களுக்கு எதிராக இது கடுமையாக பயன்படுவதன் மூலம் இதன் உண்மைச் சொரூபம் வெளிப்படுகின்றது. இப்பாரபட்சத்தன்மையும், சுதந்திரமான நகர்வுக்கு விதிக்கப்பட்ட தடையும், ஐ. நா. சபையின் குடியியல், அரசியல் சட்டங்களின் 2 (1) விதிக்கு முரணானதாக உள்ளது. அரசாங்கத்தின் கேவலமான உள்நோக்கமும், இந்நடைமுறையின் கடுமையும், தமிழ் மக்களின் மனித உரிமைகளை குழிதோண்டிப் புதைப்பதாக உள்ளது. தமிழீழ மக்களின் தன்னாட்சி உரிமை வென்றெடுக்கும் போதுதான் தமிழ் மக்கள் கௌரவத்துடனும், சகல மனித உரிமைகளை கைவரப்பெற்றவர்களாயும் இருப்பார்கள் என்பதற்கு கொடூர சாட்சியாக இவ்வடையாள அட்டைமுறை இருந்து வருகின்றது. ■

# படைப்பு

"ஒவ்வொருவனும் தான் வாழும் காலத்தில் நிகழ்ந்த சம்பவங்களை எதிர் காலத்தவர்களும் வாசித்து அறியக் கூடியதாக கலைப்படைப்புகளை உருவாக்க வேண்டும். கலைஞரால், எழுத்தாளனால், கவிஞனால் உருவாக்கப்படும் கலைப்படைப்புகள் போர்க்காலச் சம்பவங்களை, வீரதீரச்செயல்களை, தியாகங்களை எதிர்காலத்தவர்கள் அறிந்து கொள்ளக்கூடிய வரலாற்றுப் படைப்புகளாக வேண்டும்".

"தனிமனிதன் ஒருவன் இருக்கும்போது வாழ்வான். - செத்தபின் மறைவான்.

"ஆனால் கலைஞனோ இருக்கும்போதும், செத்தபின்பும் வாழ்வான். எனவே இறந்தபின்பும் வாழ்ந்து கொண்டிருக்கிற பாக்கியம் கலைஞன், கவிஞன், கதாசிரியனுக்கே உண்டு.

இத்தகைய சிறப்பு வாய்ந்தவர்கள் இன்றே படைப்புகளை ஆக்குங்கள். முன்னைய கலைஞர்களை விட இன்றைய கலைஞர்களுக்குத்தான் வாய்ப்பும் பொறுப்புகளும் உண்டு.

இன்று நடைபெறும் போராட்டத்தை, இராணுவத்தினரின் அட்டூழியங்களைப் படம் பிடித்துக்காட்டுவது போல வரலாறு படைக்காத கலைஞர்கள், கவிஞர்கள், கதாசிரியர்களால் என்ன பயனுண்டு?

ஆக்க இலக்கியங்களை உருவாக்கப்போகும் கலைஞர்களுக்குப் போராட்ட வரலாறு தெரிய வேண்டும். எதிர்கால மக்கள் போராட்ட வரலாற்றைப்பற்றி அறியக்கூடியதாக இலக்கியங்கள் அமைய வேண்டும்.

புதுவை இரத்தினதுரை.
கலை பண்பாட்டுக் கழகத் தலைவர்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**விடுதலைப் புலிகளின் பிரதித் தலைவர் திரு. மாத்தையாவின் கிழக்கு மாகாணப் பயணத்தின் போது, அவரோடு அவரது பயணத்தில் பங்கெடுத்துக் கொண்ட பத்திரிகையாளர் ஒருவரின் கட்டுரையிலிருந்து...**

# உதிக்கும் திசை நோக்கி ஒன்றாக பயணம்

வே.





தமக்கு சந்தேகமானவர்களை இராணுவத்திடம் பிடித்துக் கொடுக்கும் வேலையில் ரெலோவினர் ஈடுபடுகின்றனர். தம்மைப்பற்றி இராணுவத்தினர் என்ன அபிப்பிராயம் கொண்டுள்ளனர் என்பதே இவர்களுக்குத் தெரியாது" என்றார் விசு. "இராணுவத்தினருக்கும், ரெலோவினருக்கும் இடையில் பொது நோக்கம் ஒன்று இருக்கும்தானே. அவர்களுக்குள் அபிப்பிராயப் பேதத்திற்கு இடமில்லையே." என்றேன்.

அதற்கு அவர் நாசிவன் தீவில் இருந்து ஒருவர் பொருட்கள் வாங்க வாழைச்சேனைக்குப் போனார். அவரை சந்தேகத்தின் பேரில் ரெலோவினர் பிடித்து இராணுவத்திடம் கொடுத்தனர். கைது செய்யப்பட்டவருக்குச் சிங்களம் தெரியும். கைது செய்த ரெலோ உறுப்பினர்க்குச் சிங்களம் தெரியாது. இராணுவத்தின் முன்னிலையில் கைது செய்யப்பட்டவரை நிறுத்திச் சில கேள்விகள் கேட்கப்பட்டது. அப்போது ரெலோ உறுப்பினரும் நின்றார். அப்போது அங்கிருந்த இராணுவ அதிகாரியும், சிப்பாய்களும்

"இவர்களின் கதை எங்களால்தான் முடியப்போகின்றது. இதற்குள் இவர்கள் மற்றவர்களைப் பிடித்துத் தருகின்றார்கள்" என்று சிங்களத்தில் உரையாடிவிட்டு தன்னைப் போகச் சொன்னதாகச் சொன்னார். "இதிலிருந்து பாருங்கள்; இவர்களைப்பற்றி இராணுவத்தினர் நிலைப்பாடு எப்படியிருக்கின்றது" என்று சொன்னார்.

"இவர்கள் ஆயுதங்களுடன்தானே திரிகிறார்கள்?" என்று கேட்டேன். "ஆயுதங்களுடன்தான் திரிகிறார்கள். ஆனால் இவர்களின் ஆயுதங்களால் எதைச் சாதிக்க முடியும்? அண்மையில் வாழைச்சேனையில் ஒரு சம்பவம் நடந்தது. வாழைச்சேனையை விட்டுப் போகாமல் அங்கேயே சில குடும்பங்கள் உள்ளன. அவர்கள் வீட்டைவிட்டு எங்கும் செல்லக்கூடாதென உத்தரவிடப்பட்டுள்ளது. ஒரு நாள் பசி பொறுக்கமுடியாத சிறுமி ஒருத்தி கொஞ்சத் தூரம் போய் நாவற்பழம் பொறுக்கிச் சாப்பிட்டாள். இதை அவதானித்த முஸ்லிம் ஊர்காவல்படையினர் எல்லை தாண்டி வந்த குற்றத்துக்காக வாய்க்குள் "சொட்கண்ணை" ஒட்டி அவளைச் சுட்டுக் கொன்றனர். இந்தச்சம்பவம் நடக்கும்போது ரெலோ உறுப்

> ஜூலை 3ம் திகதி மட்டக்களப்பு சிறையிலிருந்து கொண்டு செல்லப்பட்ட 27 பேர் ஊறணியில் வரிசையாக நிறுத்தப்பட்டனர். அவர்கள் கண்ணெதிரே தீ மூட்டப்பட்டது, இராணுவத்தினரும் ரெலோவும் அவர்களை ஒவ்வொருவராக வெட்டி தீயில் போட்டனர்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பினர்கள் சிலர் பார்த்துக் கொண்டுதான் நின்றனர். அவர்களால் என்ன செய்ய முடியும்? ஆயுதம் எதற்காகத் தூக்கினோம் என்பதையே மறந்துவிட்டார்களே?" என்றார்.

"சரி அவர்களது சொந்தக்காறரைக் காக்கிறார்களா?" என்றேன். "அதெல்லாம் அந்தக்காலம். இப்போதெல்லாம் அந்தச் சலுகை கிடையாது; ரெலோ உறுப்பினரின் சொந்த மனைவிக்கே பாதுகாப்பு இல்லை" என்றார். "அப்படி ஏதாவது...." என்று இழுத்தேன். "ஆம். மட்டக்களப்பு கல்லடி வேலூர்க்கொலனியில் ஒரு ரெலோ உறுப்பினன் ஒருவன் இருந்தான். அவன் செய்த அநியாயங்கள் கணக்கில் இல்லாதவை. இந்திய இராணுவம் போகும் போது அவனும் அவர்களுடன் ஒரிசாவுக்கு ஓடிவிட்டான். போகும்போது மனைவி, பிள்ளைகளைக்கூட விட்டுவிட்டு ஓடினான். ஆனால் இராணுவத்தினர் நகருக்குள் புகும்போது இவனது மனைவியைக் கற்பழித்து, கொலை செய்தனர். அவளது சடலத்தை இலங்கை மின்சாரசபை அலுவலகம் அமைந்திருந்த காணியில் உள்ள கிணற்றில் போட்டனர். இந்தநிலைமையில்தான் அவர்கள் இருக்கின்றார்கள்" என்றார்.

**பசி பொறுக்கமுடியாத சிறுமி ஒருத்தி கொஞ்சத்தூரம் போய் நாவற்பழம் பொறுக்கிச் சாப்பிட்டாள். இதை அவதானித்த முஸ்லிம் ஊர்காவல்படையினர் எல்லை தாண்டி வந்த குற்றத்துக்காக வாய்க்குள் "சொட்கண்ணை" ஒட்டி அவளைச் சுட்டுக் கொன்றனர்.**

(நாங்கள் யாழ்ப்பாணம் வந்த பின்னர் கூட இதைப்போல ஒரு செய்தி வெளிவந்தது. 08.11.1990 அன்று மட்டக்களப்பு முகத்துவாரத்தில் உள்ள ரெலோ உறுப்பினர் பாஸ்கரனின் மனைவியை அப்பகுதியில் ரோந்து சென்ற இராணுவத்தினர் கற்பழித்துள்ளனர் என்றும் அவர் இப்பொழுது கொழும்புக்குப் போய்விட்டார் என்றும் அச்செய்தி குறிப்பிட்டது.)

"வேறு ஏதாவது சம்பவம்....?" என்று கேட்டேன். மட்டக்களப்பு மாவட்டம் எம்.பி. ஆன கருணாகரன் தனது வீட்டின் பாதுகாப்புக் கருதி செட்டிபாளையத்தில் உள்ள தனது வீட்டிற்கு அண்மையில் ஒரு முகாம் அமைக்குமாறு இராணுவத்தினரை வேண்டிக் கொண்டார். சில நாட்கள் செல்ல செட்டிபாளையத்தில் இருந்த இராணுவத்தினரே கருணாகரனின் தகப்பனைத் தாக்கியுள்ளனர். அவர் யாரிடம் போய் முறையிடுவார் என்று கேட்டார் விசு.

இராணுவத்துடன் சேர்ந்து முற்றுகை போன்றவற்றிற்குப் போகின்றார்களா என்று கேட்டேன். "முற்றுகையா... அலுகோசு வேலையே பார்க்கிறார்கள்" என்றார். "அப்படி என்ன சம்பவம் நடந்தது?" என்றேன். இராணுவத்தால் மட்டக்களப்பு சிறையில் 32 பேர் தடுத்துவைக்கப்பட்டிருந்தனர். அதில் 5 பேரைக் கொன்றனர் என்றார். "இந்தச் சம்பவம் எப்போது நடந்தது?" என்று கேட்டேன். ஜூலை 3 ஆம் திகதி என்றார். எங்கே வைத்துக் கொன்றார்கள் என்று கேட்டேன். "ஊறணியில் இந்தச் சம்பவம் நடந்தது. எஞ்சியிருந்த 27 பேரையும் கட்டக்கூடிய அளவுக்கு சிறைச்சாலையில் வயர்களோ, கயிறோ இருக்கவில்லை. எனவே எல்லா இடமும் தேடினார்கள். இந்திய இராணுவம் போகும் போது விட்டுச் சென்ற சில வயர்த்துண்டுகள்தான் அகப்பட்டன. அந்த வயர்களை எடுத்து 27 பேரையும் கட்டி இராணுவ வாகனத்தில் ஏற்றினார்கள். கொண்டு செல்லப்பட்டவர்கள் நடக்க முடியாத நிலையில்தான் சென்றார்கள். அந்தளவுக்கு ஏற்கனவே தாக்கப்பட்டிருந்தார்கள். போகும் போது வயர்களை மறந்து விடாமல் கொண்டுவாருங்கள், இனிமேல் பிடிபடுபவர்களுக்கு தேவைப்படும் என்று ஒருவன் கூறினான். இராணுவ வாகனத்தில் கொண்டு செல்லப்பட்ட இவர்கள் ஊறணிக்குக் கொண்டு செல்லப்பட்டு வரிசையாக நிறுத்தி வைக்கப்பட்டனர். அவர்கள் கண்ணெதிரேயே ரயர்களும் விறகுகளும் கொண்டுவந்து தீ மூட்டப்பட்டது. பின்னர் வரிசையாக நிறுத்தி வைக்கப்பட்டவர்களை ரெலோவும், இராணுவமும் ஒவ்வொருவராக இழுத்து வெட்டிக் கொன்றார்கள். இதில் ஒரு சிலரை மட்டுமே சுட்டுக் கொன்றார்கள்.

வெட்டும் போது ஒரு 15 வயதுச் சிறுவன் போட்ட சத்தம் மட்டக்களப்பு நகரையே தொட்டிருக்கும் என்று அதைப்பார்த்த ஒருவர் சொன்னார். வெட்டிக் கொல்லப்பட்டவர்களில் ஒரு சிலர் நெருப்பில் தூக்கிப் போடப்பட்டனர்." இவ்வாறு கூறினார் விசு.

"அவர் எங்கிருந்து பார்த்தார்?" என்று கேட்டேன். அதற்கு அருகாமையிலுள்ள ஒரு வீட்டின் ஜன்னல் ஊடாக அதைப்பார்த்தார். இப்படி ஒரு காட்சியைக் கண்டவருடைய நிலை எப்படியிருக்கும்? இச்சம்பவத்தின் பின் ஊறணியை விட்டு வெளியேறிய அவர் பேயறைந்த நிலையில் காணப்பட்டார்." என்றார். "சரி, சிறைக்குள் இருந்துதான் இவர்கள் கொண்டுவரப்பட்டார்கள் என்று எப்படிக் கூறுகின்றீர்கள்?" என்று கேட்டேன். "பகிரங்கப்படுத்த முடியாத சில விடயங்கள். ஏனெனில் இதைத் தெரிவித்தவர்களின் பாதுகாப்பிற்குப் பங்கம் விளைவித்துவிடும்" என்று சொல்லிவிட்டு அதை விளக்கினார். விசு கூறியபடியே அதன் தாக்கத்தை உணர்ந்த நான் அதை அப்படியே விட்டு விடுகிறேன்.

"வயர்களை விட்டு விடாதீர்கள் இனிமேல் பிடிபடுபவர்களைக் கட்ட உதவும்" என்று ஒரு ரெலோ உறுப்பினர் சொன்னதை நினைத்துப் பார்த்தேன். வயர்த்துண்டுகளை விட மனித உயிர்கள் பெறுமதியில்லாதவை தானா? ■

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# விடுதலைப் புலிகள் மீது

## இந்தியாவின் இரண்டாவது யுத்தப்பிரகடனம்

மதி

இந்திய மத்திய அரசு தமிழீழ விடுதலை புலிகள் இயக்கத்தை தனது நாட்டில் சட்ட விரோத அமைப்பாக பிரகடனம் செய்துள்ளது. அதனைத் தொடர்ந்து தலைவர் பிரபாகரனையும், பொட்டம்மானையும்



வே. பிரபாகரனும் பொட்டம்மானும்

மேலும் 39 பேரையும் ராஜீவ் கொலையில் குற்றஞ்சாட்டி அவர்களுக் கெதிராக நீதிமன்றத்தில் குற்றப் பத்திரிகை சமர்ப்பித்துள்ளது. மேலும் பிரபாகரனையும் பொட்டம்மானையும் கைது செய்து நாடு கடத்தும்படி உத்தியோக பூர்வமாக இலங்கை அரசை இந்தியா கேட்டுள்ளது. இத் தொடர் நடவடிக்கை திட்டமிட்ட ரீதியான அரசியல் நடவடிக்கை என்பது தெளிவாகத் தெரிகின்றது. தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான இந்தியாவின் 2வது யுத்தப் பிரகடனம் என்று இந்த நடவடிக்கையை கருதிக் கொள்ளவும் இடமுண்டு.

இந் நடவடிக்கைகளுக்கான காரணங்களை நாம் ஆராய்ந்தால் பலதர வீச்சுக்களில் இருப்பதைக் காணலாம். அந்நாட்டு அரசியலிலிருந்து சர்வதேச அரசியல் வரை இவ்வீச்சு நிற்பதை அவதானிக்கலாம். ஜெயலலிதா கொடுத்த பெரும் நெருக்கடியினால்தான் மத்திய அரசு இத்தகைய முடிவுக்கு தள்ளப்பட்டதாக தோற்றம் தரப் படுகிறது. ஜெயலலிதா தனது பதவியை நீண்ட காலம் பாதுகாத்துக் கொள்வதற்காக தமிழ் நாட்டு மக்கள் அரசியல் விழிப்புப் பெறாமல் பல்வேறு மாயைகளில் சிக்கி, கனவு உலகில் வாழ வேண்டும் என்று கருதுகிறார். தமிழீழ விடுதலைப் போராட்டம் இத்தகு விழிப்பு நிலையை ஏற்படுத்தத் தூண்டுதலாக இருப்பதாக சரியாகவே கணக்கிட்டுள்ளார். எனவே



ஜெயலலிதா

விடுதலைப் புலிகளின் இருப்பை, செயற்பாட்டை தமிழ் நாட்டிலிருந்து முற்று முழுதாக அகற்ற வேண்டும் என்பது மட்டுமல்ல அங்குள்ள ஈழத் தமிழர்களையும், அகதிகளையும் முழுமையாகத் திருப்பி அனுப்ப வேண்டும் என்று எண்ணுகிறார்.



நரசிம்மராவ்

ஒவ்வோரு ஈழத் தமிழனும் புலியென்று கிலி பிடித்த நிலையில் ஜெயலலிதாவின் நிலைமை பரிதாபகரமாக இருக்கிறது. மேலும் தமிழீழ விடுதலைப் போராட்ட ஆதரவாளர்களை தாக்குவதன் மூலம் தமிழ் நாட்டு மக்கள் மத்தியில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் விடுதலைப் போராட்டத்திற்கும் பெருகி வரும் ஆதரவையும் மழுங்கடிக்கத் திட்டமிட்டுள்ளார். விடுதலைப் புலிகளோடு தொடர்புடையோர், ஆதரவாகச் செயற்படுவோருக்கு குற்றம் நிருபிக்கப்பட்டால் 7 வருட சிறைத் தண்டனை என்று சட்டம் கொண்டு வரப்பட்டுள்ளது.

இந்திய நாடாளுமன்றத்தில் ஜெயலலிதாவின் அ. தி. மு. க., நரசிம்மராவ் அரசாங்கத்திற்கு கொடுத்து வரும் ஆதரவுக்காகவும், அண்மையில் நடைபெற இருக்கும் ஜனாதிபதித் தெரிவில் அ. தி. மு. க. உறுப்பினர்களின் ஆதரவைப்பெறும் நோக்குடனும் ஜெயலலிதா கொடுத்த நெருக்கடிக்கு மத்திய அரசு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பணிந்து விட்டதாக கூறப்படுவதிலும் உண்மை இல்லாமலில்லை. எனவேதான் இந்திய உள்துறை அமைச்சர் சவான், விடுதலைப்புலிகள் அமைப்பைத் தடைசெய்யும் பிரகடனத்தை ராஜ்ய சபையில் வாசித்த போது விடுதலைப் புலிகள் அமைப்பை "பயங்கரவாத அமைப்பு" என்று விளிக்காமல். சட்ட விரோத அமைப்பு என்று கடினம் குறைந்த வார்த்தைப் பிரயோகத்தை கையாண்டுள்ளதாக அரசியல் அவதானிகள் எடுத்துக் காட்டுகின்றனர்.



சவான்

மேலும் 2 வருடத்திற்கு ஒரு முறை புதுப்பிக்கப்பட வேண்டியதாக இத் தடை உள்ளதோடு, இத்தடை சரியானதா என ஆராய நியமிக்கப் படவிருக்கும் விசேட நீதிமன்றம் ஒன்றில் இத்தடை குறித்து ஆட்சேபம் எழுப்பி தடையை நீக்கக் கூடிய வாய்ப்புகள் இருப்பதையும் அவர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

விடுதலைப் புலிகளுக்கு எதிரான இப் பாரதூர நடவடிக் கைகளுக்கு வேறு பல முக்கிய காரணிகள் உள்ளன. அவை தமிழீழ விடுதலைப் போராட்டத்தை பலவீனப்படுத்தி, அழித் தொழிக்கும் நோக்கம் கொண்டவை. குறுகிய அரசியல் அபிலாஷைகளும், தூர நோக்கற்ற பார்வையும், ஊழலும், நிறைந்த இந்திய அரசாங்கம் தமிழீழ விடுதலைப் போராட்டத்தை தனது தேசிய நல்லன்களுக்கு எதிரான ஒன்றாய்ப் பார்ப்பதிலும் அதற்கு எதிராகச் செயற்படுவதிலும் ஆச்சரியம் எதுவும் இல்லை. எனவே தமிழ் மக்களின் நியாய பூர்வமான அபிலாஷைகளை அங்கீகரிக்காது, அதற்காகப் போராடும் விடுதலைப் புலிகளை அழிக்கக் கங்கணம் கட்டிச் செயற்படுகிறது. விடுதலைப் புலிகளுக்கு எதிராக எடுத்த நடவடிக்கைகள் மூலம், இந்தியா பிரச்சனையை சரியான அத்திவாரத்தில் வைத்து தீர்க்க முயலாமல், பிரச்சனையை இழுத்தடிக்கவும், மக்களின் வேதனைகளை அதிகரிக்கவுமே முயற்சிக்கிறது என்பது தெளிவாகின்றது. இந் நடவடிக்கை தமிழ் மக்களுக்கு எதிரானதல்ல என்று இந்தியா கூறினாலும் தமிழீழ மக்களின் அபிலாஷைகளுக்கு எதிரானதாகவும், அவர்களுக் கெதிரான போர் முரசாகவுமே உள்ளது. இந்தியாவில் குறிப்பாகத் தமிழ் நாட்டில் பிரிவினைவாத சக்திகளுக்கு தூபமிடுவதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது. அசாம் தீவிரவாதிகளுடன் தொடர்பு வைத்துச் செயற்படுவதாகவும், தமிழ் நாட்டுப் பிரிவினைச் சக்திகளை வளர்த்து விடுவதாகவும், தமிழர் மீட்புப் படைக்கு ஆட்களைத்திரட்டி பயிற்சி அளிப்பதாகவும் குற்றங்கள் பலவற்றைச் சுமத்தியுள்ளது. இக் குற்றச் சாட்டுகளுக்கு எவ்வித ஆதாரமும் இல்லை. தமிழ் நாட்டையும் இணைத்ததாக பரந்த தமிழ் "சாம்ராஜ்யத்தை" அமைப்பது போன்ற ஏகாதிபத்திய கனவுகளும் விடுதலைப் புலிகளுக்கு இல்லை. தமிழ் நாட்டு மக்கள் தங்கள் அரசியல் தலைவிதியை தாங்களே தீர்மானிக்க வேண்டும். தங்கள் விடுதலை குறித்து அவர்களே முடிவெடுத்துச் செயற்பட வேண்டும். புரட்சியை ஏற்றுமதி செய்யமுடியாது. தமிழ் நாட்டு மக்கள் தங்கள் அரசியல் அந்தஸ்தை தீர்மானிக்கும் சுய நிர்ணய உரிமையுடையவர்கள் என்பதில் உறுதியான நம்பிக்கை உடையவர்களாக விடுதலைப் புலிகள் உள்ளனர். எனவே அவர்களுடைய சுதந்திரத்தில் தலையிட விடுதலைப் புலிகளுக்கு உரிமை இல்லை என்பதிலும் தெளிவாக உள்ளனர். எனவே விடுதலைப் புலிகளினால் தமிழ் நாட்டு மக்கள் சுதந்திர உணர்வுகளைப் பெற்றுவிடுவர் கிளர்ச்சிகளில் இறங்கிவிடுவர்; சுதந்திரத்திற்கான ஆயுதப் போராட்டம் என்ற உன்னத எதிர்ப்பியக்கமாக வளர்ச்சி பெற்றுவிடுவர் என்று இந்திய அரசு அச்சப்படுவதில் அர்த்தமில்லை. தமிழீழ விடுதலைப் போராட்டத்தை நசுக்க எடுக்கும் இந்திய நடவடிக்கைகளே, தமிழ்நாட்டில் பாரதூர விளைவுகளை ஏற்படுத்தப்போகின்றன. தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு ஆதரவாக, தமிழ்நாட்டு மக்கள் மத்தியில் எழும் உணர்வுபூர்வமான, ஆத்மார்த்தமான, சகோதரமயமான ஜனநாயக வெளிப்பாடுகளை அடக்குமுறைச்சட்டங்கள் மூலம் அடக்க எடுக்கும் முயற்சிகளே, "அமைதிப் பூங்காவான" தமிழகத்தில் வன்முறைக்கிளர்ச்சியை தூண்டப்போகின்றன.

தமிழ்நாட்டு மக்களின் நியாயமான, தேசிய அபிலாசைகளை கருத்து ரீதியாக, சட்ட ரீதியாக, அரசியல் ரீதியாக, ஆயுத நடவடிக்கை மூலமாக அடக்க கைக்கொள்ளும் வன்முறைகளே தமிழ் நாட்டில் ஆயுதப் போராட்டத்தைத் தோற்றுவிக்கும் கருக்களைப் பிறப்பிக்கின்றன என்று எச்சரிக்க விரும்புகின்றோம். தமிழ்நாட்டுப் பெருந்தலைவராகிய பழ. நெடுமாறன்




நெடுமாறன்

அவர்கள் தனது கண்டன அறிக்கையில் குறிப்பபிட்டது போல்,

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



'அமைதிப்படை' மீண்டும் வருமா?

> **தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாடு, தியாகமனப்பான்மை, உறுதி, கொள்கைப் பிடிப்பு, தொழில்நுட்பத் திறன் ஆகியவை குறித்து எப்போதும் எனக்கு உயர்ந்த மதிப்பு உண்டு.**
>
> - I. P. K. F. தளபதி லெப். ஜெனரல். S. C. சர்தேஷ் பாண்டே -

அனைத்துத் தமிழ் மக்களுக்கும் எதிராக மத்திய அரசால் செய்யப்பட்ட போர்ப் பிரகடனமாகவே, விடுதலைப் புலிகளுக்கு எதிரான நடவடிக்கை உள்ளது.

இந்தியப் போர்ப்பிரகடனம், ஸ்ரீலங்கா அரசுடன் நேரடியானதும், மறைமுகமானதுமான கூட்டு நடவடிக்கைக்கு வழிவகுக்கின்றது. தமிழ்நாட்டில் எடுத்த நடவடிக்கைகள், கரையோர கண்காணிப்புகள், இந்திய கடற்படையின் ரோந்துகள் விஸ்தரிக்கப்பட்டு வருகின்றமை, உளவுத் தகவல்களை ஒருவருக்கொருவர் பரிமாறிக்கொள்ளுதல், பயிற்சி அளித்தல், அரசியல் பொருளாதார, இராணுவ நடவடிக்கையில் கூட்டு ஆலோசனை என்ற அளவில் ஸ்ரீலங்காவும் இந்தியாவும் விடுதலைப் புலிகளுக்கு எதிராக கூட்டாகச் செயற்பட்டு வருவதுகண்கூடு. பிரச்சார ரீதியில், ஒருவர் நடவடிக்கைக்கு இன்னொருவர் வக்காலத்து வாங்குவதும் இடம் பெற்று வருகின்றது. இராணுவத் தளபாடங்களை விநியோகித்தல், இராணுவ ஆலோசகர்ளை அனுப்புதல், மீண்டும் படைகளை அனுப்புதல், விசேட அதிரடிப்படை மூலம், குறுகியகால மின்னல்வேக இராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் என்ற அளவுக்கு வளர்த்துவதற்கு இருபக்கத்திலும் ஒரு சாரார் முயல்வதும் தெரியவந்துள்ளது.

நீண்டகாலக் கண்ணோட்டத்தில், இயற்கையான நண்பர்களான தமிழீழ மக்களைப் பகைத்து, நெருப்பை எடுத்து மடியில் கட்டிக் கொள்வதைப்போல, ஸ்ரீலங்கா அரசுடன் இந்திய அரசு, குலாவ எடுக்கும் முயற்சிகள் இந்தியத் தேசிய, புவிசார் அரசியல் நலன்களுக்கு மிகப் பாதகமாகவே அமையும். இந்தியாவுடனான போரின் பின்னர், விடுதலைப் புலிகள், தமது போர்க்கால விநியோகங்களுக்கு இந்தியாவை பின்தளமாகப் பயன்படுத்துவதை நிறுத்திக்கொண்டு, தம் மண்ணிலேயே சகல தேவைகளையும் பூர்த்தி செய்ய முடிவெடுத்துச் செயற்பட்டு வருகின்றனர். மன உறுதி தளர்ந்த ஸ்ரீலங்கா இராணுவமே, விடுதலைப் புலிகளின் சிறந்த ஆயுத விநியோகத்தராக இருந்து வருகின்றது. இந்நிலையில், விடுதலைப் புலிகளின், இராணுவ நடவடிக்கைக்கு இத்தடை பாதகமாக இருக்கப்போவதில்லை.

சர்வதேச சமூகத்தைப் பொறுத்தவரை, தமிழீழத் தேசியப் பிரச்சனையை சர்வதேச சமூகம் சரியான கண்ணோட்டத்தில் அணுக முற்பட்டுள்ளது. நிரந்தரத் தீர்வை பல்வேறு நோக்கங்களுக்காக விரும்பும் மேற்குலக நாடுகள், தமிழ் மக்களின் அபிலாசைகளைப் பூர்த்தி செய்வதாய், நீதியான தளத்தில் காணப்படும் தீர்வே நீடித்திருக்கும் என்று கருதுகின்றன. ஆயுத முரண்பாட்டில் இருக்கின்ற, தமிழீழ விடுதலைப் புலிகளையும், ஸ்ரீலங்கா அரசாங்கத்தையும் பேச்சுவார்த்தைக்கு அழைத்து, சர்வதேச மத்தியஸ்தத்தின் கீழ் பிரச்சினையைத் தீர்க்க முன்னெடுப்புகளை மேற்கொண்டுள்ளன. இந்நிலையில், சர்வதேச மத்தியஸ்தத்தை அகற்றும் நோக்குடன், தனது மேலாதிக்கப் பிராந்தியத்தில், வெளிநாடுகளின் நேர்மையான தலையீட்டையும் தடுக்கும் நோக்குடன்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இந்தியா எடுத்துள்ள முயற்சி தோல்வியில்தான் முடியும். இந்தியா, தனது நடவடிக்கையை பின்பற்றி, சர்வதேச நாடுகளும் விடுதலைப் புலிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கும் என வீண் கனாக் காண்கின்றது. பிரச்சனையின் அகோர வெக்கைக்கு ஈடு கொடுக்க முடியாது, திணறும் ஸ்ரீலங்கா அரசே, விடுதலைப் புலிகளைத் தடைசெய்து சமாதானக் கதவுகளை நிரந்தரமாக மூட முடியாது தடுமாறும்போது, அகதிகள் பிரச்சனையை, தம் முதுகில் சுமந்துள்ள மேற்குலக நாடுகள், விடுதலைப் புலிகளை தமிழ் மக்களிடமிருந்து பிரித்து நடவடிக்கை எடுக்கும் என எண்ணுவது யதார்த்தத்திற்கு முரணானதாகும். ஆயினும், சில நாடுகள், இந்தியாவின் அழுத்தத்திற்கு சிறிது இடம் கொடுத்து, ஏதாவது ஒரு சில நடவடிக்கைகளை கண்துடைப்பாக மேற்கொள்ளும் என்றும் எதிர்பார்க்கலாம். இந்தியாவின் இந்நடவடிக்கைகளை தமிழீழ மக்கள் ஒரு சவாலாக இன்று எதிர்கொண்டு முறியடிப்பதைத் தவிர வேறு வழியில்லை. பிரபாகரனைக் கைதுசெய்ய இந்தியா எடுக்கும் முயற்சி, முன்னேறிச் செல்லும் வரலாற்றைக் கைது செய்வதற்கு ஒப்பாகும் என்று விடுதலைப் புலிப் பேச்சாளர் தெரிவித்துள்ளார். முன்னோக்கிச் சேல்லும் வரலாற்றை தடுத்து நிறுத்துவதால் பின்தங்கப் போவது இந்தியாவே. ■

## ஏ! பொய்மையே!

அந்தக் காலைப் பொழுதில்
ஆதவக் கதிர்கள்
மீண்டும் ...மீண்டும்...
அந்தக் கொடூரத்தை
வழமைக்கு மாறுன செங்குருதிக் -
கதிர்களால்
விழித்துக் காட்டியது
இன்னும் பல "உடுகம்பொலகள்"
தாசர்களின் அரவணைப்பில் - என்று

28.04.1992....ஆம்
அந்தப் பொழுது விடியுமுன்
கிழக்கு மண் மீண்டும்...மீண்டும்
இனவெறியர்களின் கோரத்திற்கு

விடிகாலையில் செய்திபொன்று
59 : 74 பிணங்கள்
பழிக்குப் பழியாம்....

ஈழத்தாயின் முதுகெலும்பு
ஆதவன் எழும் திசை வழியாம்
என்பதால்.....

கத்திகள், கோடரிகள்.... ஆம்
ஒரே தாசர்கள்,... இருவேடத்தில்
ஒரே மேடையில்
மீண்டும் ஒரு அரங்கேற்றம்
ஏனெனில்
ஈழத்தின் பிறப்பை - இனி
இராணுவத்தால் தடுக்க முடியாது
என்பதாலோ.....

அரச ஊதுகுழல்களின்
பிரச்சார ஒப்பாரி
மரண ஓலங்களையும் - மீறி
இனவெறித்தாசர்களின்
இரட்டை வேடங்கள்
இப்படியாகக் காப்பிடப்படுகின்றன

நிச்சயம் ஒருநாள்
உண்மை......
இன்னுமொரு
"உடுகம்பொல"
தேடப்படும் நபராகும்போது.

- மோகன் -

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சர்வதேச மன்னிப்புச் சபை, 28.04.1992 இல் வெளியிட்ட அறிக்கை

# நீதி விசாரணையற்ற கொலைகள்.



*14.04.92*ஆம் திகதி பிற்பகல் 2 மணியளவில், இராணுவத்தினரோடு கூட்டுச் சேர்ந்து செயல்படும் TELO குழுவினர், மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள மண்டூர் எனும் இடத்தில், ஒரு குடும்பத்தைச் சேர்ந்த தம்பிமுத்து சுப்பையா, அவர் மனைவி, 5 பிள்ளைகளையும் அப்போது அவ்வீட்டில் இருந்த அயல்வீட்டுப் பெண்ணையும் கொலை செய்துள்ளனர். ரெலோ குழுவினர் இராணுவத்தினர் சிலருடன் கூடி வந்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

அன்று காலை ரெலோ குழுவைச் சேர்ந்த இருவர் விடுதலைப் புலிகளினால் கொல்லப்பட்டதற்கு பழிவாங்கும் நடவடிக்கையாகவே இவ் எட்டுப் பேரும் கொல்லப்பட்டுள்ளனர். ரெலோவின் மீதான பதுங்கித்தாக்குதல் அக் குடும்பத்தாரின் வீட்டுக்கு அண்மையில் நடந்துள்ளது. ஒரு மணி கழித்து தப்பிய ரெலோவினர், இராணுவத்தினரைக் கூட்டிக் கொண்டு அக்குடும்பத்தின் வீட்டினுள் நுழைந்ததாக அந்நிகழ்ச்சியைக் கண்டோர் விபரித்தார்கள். வீட்டினுள் துப்பாக்கிச் சூடுகளைக் கேட்டதாக அச்சாட்சிகள் தெரிவித்தனர். பின்னர், துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் அவர்களது உடல்கள் காணப்பட்டன. சிலரது உடல்களில் வெட்டுக் காயங்களும் காணப்பட்டன. உடல்கள், மட்டக்களப்பு ஆஸ்பத்திரிக்கு கொண்டு செல்லப்பட்டு, அங்கு பிரேதப் பரிசோதனை நடாத்தப்பட்டது. அதன் பின்னர் இறந்தவர்களின் உடல்கள் புதைக்கப்பட்டன.

மறுநாள் ஐலன்ட், டெய்லி நியூஸ் உட்பட பல பத்திரிகைகள், மட்டக்களப்பு, மண்டூரில், 7 பொது மக்கள், சண்டை ஒன்றின் இடையில் சிக்கி, தவறுதலாகக் குண்டடிபட்டு உயிரிழந்ததாக செய்தி வெளியிட்டன.

இச்சம்பவம் தொடர்பாக, முழுமையான, பாரபட்சமற்ற விசாரணை நடத்தி, இதற்குப் பொறுப்பானவர்களைச் சட்டத்தின் முன் நிறுத்துமாறு, அரசாங்கத்தை சர்வதேச மன்னிப்புச்சபை கோரியுள்ளது.

ஸ்ரீலங்கா பத்திரிகைகள், ஆயுதப்படையினர், அவர்களது கூட்டணிகள் ஆகியோருக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நடைபெறும் மோதல்களின் போது, பொது மக்கள் இடையில் சிக்கி கொல்லப்படுவதாக அடிக்கடி செய்திகளை வெளியிட்டு வருகின்றன. இக் கொலைகளுக்கான சரியான சந்தர்ப்ப சூழ்நிலைகளை அறிந்து கொள்வது எப்போதும் கடினமான காரியமாக இருந்து வருகின்றது. ஆயினும் இச்சம்பவத்தை நேரில் கண்டவர்கள் கொடுத்த விபரமான சாட்சியங்களின் பிரகாரம், அக்குடும்பத்தினரும், அயலவப்பெண்ணும் ரெலோவினரால் பழிவாங்கும் நோக்குடன் கொல்லப்பட்டனர் என்பது தெளிவாகத் தெரிகிறது.

இவ்வாறு சர்வதேச மன்னிப்புச் சபையின் அறிக்கை தெரிவிக்கின்றது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்



## அவசரக்குழந்தை

www.tamilarangam.net

விடுதலைப்புலிகளுக்கு
திய அரசு மாநிலங்களவையில் மத்
தடை விதித்து அறிக்கை வெளியா
கியுள்ளது. இது எதிர் பார்க்கப்பட்ட
ஒன்றுரும்.

அரசியல் நிர்ப்பந்தமும், அள
வுக்கு மீறிய அச்ச உணர்வும் பெற்
றெடுத்த அவசரக்குழந்தை இது.

கி. வீரமணி.
(திராவிட கழக பொது செயலாளர்)

## ஈரம் உலரா...
## எல்லை...

கட்டளை உனது!
கவிதை எமது!

வல்லரசாங்கமே!
உனது கைகள்
எனது பேனாவை முறிக்கலாம்,
அவதூறுச் சேற்றில்
எம் முகத்தைப் புதைக்கலாம்
"சுட்டுவிரல்களை"
வெட்டி எறியலாம்!
எழுதப்பட்டுவிட்ட
எமது கவிதை
நீ பறித்துக் கிழிக்கும்
தாள்களில் இல்லை
பேனா முனையில் இல்லை
அசையும் விரல்களில் இல்லை.
நீ அறைந்து மூடும்
உதடுகளில் இல்லை.

இலையைத் தென்றல்
அசைப்பது போல-
மலரைச் சூரியன்
மலர்விப்பது போல
அது
மக்கள்
இதயங்களை
வருடிக் கொண்டிருக்கின்றது.

துடிக்கும் இதயம்
உனக்கிருந்தால்
அந்தப் பாடலை
நீயும் கேட்கலாம்
முடக்கிய உன் மனசாட்சியைத்
தட்டி எழுப்பினால்

சென்னையில் நடந்த தியாகி தி
ஆண்டு நினைவு நாளில் படிக்க
லிருந்து..
நன்றி: க

## இனமான எழுச்சியை எவன் அவன் தடுப்பவன்?

■ சாலை இளந்திரயன் ■

இறக்கை முளைக்கும்வரை
கூட்டுக் குஞ்சாகவே கிடக்கிறது பறவை;
இறக்கை தளிர்த்ததுமோ-
எல்லைகளை எல்லாம் அளந்து வந்துவிடுகின்றது!
விதைக்குள் இருக்கும்போது
ஒடுங்கிக் கிடக்கின்றது ஆலமரம்;
விதை வெடிக்க, வெளிவந்ததுமோ-
விரிந்து விரிந்து வானத்தை நிரப்பிவிடுகின்றது!
போர் முனை ஒன்று வெடிக்கும் முன்பு
புலிவீர இளைஞர்களின் பெயர்
யாழ்ப்பாணத்திலே கூடச் சரியாகத் தெரியாது!
இன உரிமைப் போர் எழுந்ததுமோ-
எங்கும் புலி, புலி-ஈழத்துப் புலிகள்!
அந்தச் சில புலிகளை
அடக்கி ஒடுக்கிவிட முடியாது என்பது
இப்போதாவது எல்லோருக்கும் புரிகின்றதா?
பறக்கையைப் பறித்துவிட முடியாதவர்கள்-
படர்ச்சியைத் தடுத்துவிட முடியாதவர்கள்-
விடுதலை
உணர்ச்சியை மட்டும் உதிர்த்துப் போடுவார்களா?
இயற்கையோடு இயற்கையாக எழுகிறது இன எழுச்சி!

நன்றி: அறிவியக்கம் (தமிழகம்)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

கள் நீளும் ● ●

கவிஞர் இன்குலாப்

அந்தப் பாடலை
நீயும் இசைக்கலாம்!
எரியும் எமது நெஞ்சின்
நெருப்பில்....
உனது
அழுக்குகளையெல்லாம்
எரித்துவிட்டு...
மனிதனாய் நீயும்
சுத்தப் படலாம்...

இல்லையேல்...
இனியும் கேள்!
காலம் உனக்கே எனக்
கனவு காணாதே!
சூரிய வட்டத்தின்
சுழற்சி நிகழ்வது
உன்
கடிகார வட்டத்தின்
நொடிமுள்ளில் இல்லை!
சிறைகள் உனது!
விடுதலை எமது!
மானுடம் எதிலே
மலரும் என்பதை
சூரியக் கதிர்கள்
முடிவு செய்யட்டும்!
கட்டளை உனது!
கவிதை எமது!
வரலாற்றின் வரிகளாய்
எதை எழுதுவதென்று
காலத்தின் கைகள்
தீர்ப்பளிக்கட்டும்.

பனின் நான்காம்
பட்ட கவிதையி
ன்னோட்டம்

# நன்றி



www.tamilarangam.net

விடுதலைப்புலிகள் இயக்கத்துக்கு எத்தனை தடைகள் விதிக்கப்பட்டாலும் அவர்களை ஆதரிப்பது என்ற நிலையில் இருந்து மாறமாட்டோம்.

விடுதலைப்புலிகளுக்கு தடை விதிக்கப்பட்டுள்ள செயலுக்காக தமிழக முதல்வர் ஜெயலலிதா மத்திய அரசுக்கு நன்றி கூறுகிறார். நாங்கள் ஜெயலலிதாவுக்கு நன்றி கூறுகிறோம்.

ஏன் என்றால் நாங்கள் இதுவரை தூங்கிக் கொண்டிருந்தோம். இப்போது சுரணை வந்துவிட்டது. தூக்கத்தில் இருந்து விழித்துக்கொண்டோம். விடுதலைப்புலிகளை தடை செய்ததின் மூலம் இந்த விழிப்புணர்வு ஏற்பட்டுள்ளது.

விடுதலைப்புலிகளை ஆதரித்தால் 7 வருடம் சிறை தண்டனை என்கிறார்கள். ஏழு வருடம் என்ன எழுபது வருடம் சிறையில் போட்டாலும் சரி நாங்கள் அஞ்சப் போவதில்லை.

டாக்டர். இராமதாஸ்.
(பாட்டாளி மக்கள் கட்சி தலைவர்)

## எனைச் சிறை செய்யினும் செய்க!

- பாவலரேறு பெருஞ்சித்திரனார் -

இதோ, நான் ஒருவன்
இங்கிருக் கின்றேன்!
எனைச் சிறை செய்யினும் செய்க!
ஈழத் தமிழரை
ஆதரிக் கின்றேன்!
என் தலை கொய்யினும் கொய்க!
அதோ, என் தமிழரைச்
சிங்களர் கொல்வார்!
ஆடும் என் சதை, நரம்பு எல்லாம்!
அடடா! உலகம்
கேட்டிடும்; பார்த்திடும்!
ஆயினும் அதன் மனம் கல்லாம்!
'எழுதினால் பேசினால்
சிறையிடுவோம்' - என
எந்தமிழ் அரசு கூறிடுமா?
எவளோ ஒருத்தி
எமை ஆள்வதனால்
எம்முடல் உணர்வு மாறிடுமா?

பழுதிலாக் கொள்கையால்
உரிமை கேட்கின்றார்!
பதடிகள் அதைத்தவ றென்பதா?
பற்பல இளைஞர்கள்
பெண்கள் சா கின்றார்;
பார்த்துக்கொண் டே,மலம் தின்பதா?

இந்தியர் என்றால்
இரும்பு அவர் உள்ளம்!
ஈழத் தமிழர் எம் இனமே!
எங்கவர் வாழினும்
எம்மவர் அன்றோ?
இவர்க்குயிர் துடிக்கும்,எம் மனமே!
வெந்துயிர் விடுபவர்
மக்களே என்றால்
வெறும் அரசியல் நோக்கு எதற்கு?
வேற்று நாட்டினர் எனில்
பாலஸ்தீனர், ஆப்-
பிரிக்கருக் கிரங்குதல் எதற்கு?

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

நன்றி: தமிழ்நிலம் (தமிழகம்)

www.tamilarangam.net

(விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தடை செய்துவிடுவதால் ஏற்படும் நன்மை, தீமைகளை நடுநிலையுடன் ஆராய்கிறார் - அசோக்மித்ரா. விடுதலைப் புலிகள்மீது கொண்டுள்ள ஆத்திரத்துக்கும், பகை உணர்வுக்கும் கூட ஒரு திட்டவட்டமான, தெளிவான பார்வையும், நியாயமான காரணங்களும் வேண்டும் என்கிறார்.)

# புலிகள் இயக்கத் தடைபற்றி அசோக் மித்திராவின் ஆய்வு

இக்கட்டுரை, தமிழீழ விடுதலைப் புலிகளை இந்திய அரசு இந்தியாவில் சட்டவிரோத அமைப்பென தடைசெய்ததற்கு முன்பாக வரையப்பட்டது. இக்கட்டுரை சித்திரை மாத 'கரண்ட்' ஆங்கில வார இதழில் வெளிவந்தது. தமிழாக்கம்: கே. ஆர்.

நான் இங்கே எழுதப் போகும் கருத்துக்களை மிகவும் துல்லியமான உண்மைகளாகக் கூறவில்லை. ஆனால் யதார்த்த நிலைமை என்ன என்பதைப் புரிந்து கொள்வதற்கு இந்தக் கருத்துக்கள் உதவும். 40 ஆண்டுகளுக்கு முன்பு, அதாவது 1950 களில் நடந்த ஒரு சம்பவத்தை நினைவுபடுத்துகின்றேன். அப்போது நேபாளத்தில் 'ராணா'க்களின் ஆட்சி நடந்து வந்தது. இந்த 'ராணா' பரம்பரையினரின் மன்னர் ஆட்சியை முடிவுக்குக் கொண்டு வந்து, ஜனநாயக ஆட்சியை நிறுவ, நேபாள காங்கிரஸ் போராடியது. நேபாள காங்கிரசுக்கு இந்தியாவில் ஏராளமான ஆதரவாளர்கள் உண்டு. நேபாள காங்கிரஸ் கட்சியினரும் இந்தியாவில் இருந்தார்கள். இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சியை எதிர்த்து நடந்த 'சுதந்திர'ப் போராட்டத்தில் நேபாள காங்கிரஸ் தலைவருக்கு மிகவும் ஈடுபாடு இருந்தது; இதே போன்ற ஒரு சுதந்திரப் போராட்டத்தை தங்கள் நாட்டிலும் நடத்த வேண்டும் என்ற உணர்வினைப் பெற்றிருந்தனர். அப்போது இந்தியாவின் பிரதமராக இருந்த நேரு, நேபாள காங்கிரஸ் தலைவர்களை மிகத் தீவிரமாக ஆதரித்தார். தங்களின் சுதந்திரப் போராட்டத்திற்கு இந்தியா உதவும் என்ற நம்பிக்கையை நேபாளக் காங்கிரசார் வளர்த்துக் கொண்டிருந்தனர். விரைவிலோ அல்லது சற்றுக் காலம் கடந்தோ, நேபாளத்தில் மன்னர் ஆட்சி ஒழிந்து, ஜனநாயக ஆட்சி மலரப் போவது உறுதி என்று நம்பிக்கொண்டிருந்தார்கள். இந்தக் காலகட்டத்தில் தான் ஒரு திடீர் திருப்பம். நேரு திடீரென்று 'ராணா'க்களுடன் நண்பர்களாக ஆக முடிவு செய்தார். இந்தியாவில் தங்கியிருந்த எல்லா நேபாள காங்கிரஸ் தலைவர்களையும் கைது செய்ய உத்தரவிட்டார். நேபாளத்தில் மன்னர் ஆட்சிக்கு எதிராக நேபாள காங்கிரசார் நடத்திய ஆயுதம் தாங்கிய போராட்டத்திற்கு, இந்திய கடல் பரப்பு வழியாக ஆயுதங்கள் கொண்டு செல்வதைக் கண்காணித்து பறிமுதல் செய்ய உத்தரவிட்டார். அத்தோடு இந்திய ராணுவமும் மன்னர்கள் ஆட்சியைப் பாதுகாக்க நேபாளத்துக்குப் போனது. நூற்றுக்கணக்கான நேபாளியர்கள், இந்திய இராணுவத்தால் கொன்று குவிக்கப்பட்டனர். நேபாள காங்கிரசின் ஆதரவாளர்கள் என்று சந்தேகிக்கப்படுகிறவர்களை இந்தியராணுவம் கொடூரமாக சித்திரவதை செய்தது.

இந்தச் சம்பவம் - முட்டாள்தனமாகவும், கேலிக்குரியதாகவும் இல்லையா? ஜனநாயக விரோத சக்திகளைப் பாதுகாப்பதற்குத்தான், இந்தியா இருக்கின்றதா? இதே பின்னணியில் விடுதலைப் புலிகளின் அவலநிலையையும் எண்ணிப்பாருங்கள்.

1983 ஆம் ஆண்டு இலங்கையில் நடந்த இனக் கலவரத்தையொட்டி ஏராளமான தமிழர்கள் தமிழ் நாட்டுக்கு அகதிகளாக வந்தார்கள். தங்கள் வீடுகளையும், உடைமைகளையும் விட்டுவிட்டு, ஆயிரக்கணக்கான தமிழர்கள், தமிழ் நாட்டில் அகதிகளாக தஞ்சம் புகுந்தார்கள். அப்போது முதலமைச்சராக இருந்த எம். ஜி. ராமச்சந்திரன், இதனால் மிகவும் வேதனைக்கு உள்ளானார். அவர், இந்த அகதிகளுக்கு இயன்றளவு எல்லா உதவிகளையும் செய்ய வேண்டும் என்று அன்றைய பிரதமர் இந்திரா காந்தியிடம் வற்புறுத்தினார். மானில அரசின் கஜானாவில் இருந்தே போராளிகளுக்கு நிதி வழங்கவும் எம்.-ஜி. ஆர் ஏற்பாடு செய்தார். இந்தப் பணத்தைக் கொண்டு போராளிகள், சிங்கப்பூரிலிருந்து ஆயுதங்களை வாங்கிக் குவித்தபோது, டில்லி அரசு அதைக் கண்டும் காணாததுமாக ஒதுங்கிக் கொண்டது. அடுத்த சில ஆண்டுகளிலேயே வேறு மாற்றங்கள் ஏற்படத்துவங்கின. இந்திரா கொலை செய்யப்பட்ட பின், ராஜீவ் பிரதமராக வந்தவுடன், இலங்கை அரசாங்கத்துடன் ஒரு உடன்பாடு செய்து கொள்ள முன்வந்தார். இலங்கைப் பிரச்சனையை 'சுமுக நிலைக்கு மாற்ற'அதி வேகமான நடவடிக்கைகளை எடுக்க முன்வந்தார். ஏற்கனவே, பல ஆண்டுகளாக, இந்தியாவின் ஆதரவோடும், அனுமதியோடும் இங்கே தங்கிக் கொண்டு, போர்ப் பயிற்சி முகாம்களை அமைத்து பயிற்சி எடுத்துக் கொண்டிருந்தனர் போராளிகள். இவர்கள் ராஜீவ் காந்தி ஏற்படுத்தும் எத்தகைய ஒப்பந்தமாக இருந்தாலும், அதை ஏற்க வேண்டும் என்று கட்டாயப்படுத்தப்பட்டனர்.

மற்றொரு அவசர அவசரமான முடிவையும் ராஜீவ் காந்தி எடுத்தார். இலங்கைக்கு 'அமைதிப் படையை' அனுப்ப முடிவு செய்தார். இலங்கை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ராணுவத்துடன் சேர்ந்து கொண்டு, போராளிகளின் ஆயுதங்களைப் பறிமுதல் செய்து, இலங்கை அரசு சுமுகமான நிர்வாகத்தை மேற்கொள்ளச் செய்வது அமைதிப் படையின் வேலை. விடுதலைப் புலிகளின் தலைவர்களை டில்லிக்கு அழைத்துப் போய் ரகசிய மான இடத்தில் தங்க வைத்து, ராஜீவ் -ஜெயவர்த் தனா ஒப்பந்தத்தை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று ராஜீவ் கட்டாயப்படுத்தினார். போராளிகளிட மிருந்து ஆயுதங்களைப் பறிக்க, இந்திய அமைதிப் படை துவங்கிய போது புலிகள் அதற்கு சம்மதிக்க மறுத்தனர். ராஜீவ் காந்தியின் நடவடிக்கைகள் போராளிகளுக்கு சந்தேகத்தை எழுப்பின. மேலும் ஒரு வேதனையான சம்பவம் நடக்கின்றது. எம்.-ஜி. ஆர் மரணமடைகிறார். தமிழ் நாட்டில் எந்தக் கட்சி ஆட்சிக்கு வந்தாலும், அரசாங்கத்துடன் நல் லுறவை ஏற்படுத்திக் கொள்வதே சிறந்தது என்ற புத்திசாலித்தனமான முடிவோடு, விடுதலைப் புலி கள், தி.மு.க ஆட்சியில் முதல்வர் கருணாநிதியை யும் சந்தித்து, அவருடன் நல்லுறவை ஏற்படுத்திக் கொண்டார்கள். இது டில்லியிலுள்ள காங்கிரஸ் ஆட்சிக்கு கோபத்தை உண்டாக்கியது. ஏற்கெனவே, இந்திய -இலங்கை ஒப்பந்தத்தை ஏற்க மறுத்த விடுதலைப் புலிகள் இப்போது தி.மு.க ஆட்சியுட னும் நல்லுறவை ஏற்படுத்திக் கொண்டதை மத்திய காங்கிரஸ் ஆட்சியால் சகித்துக் கொள்ள முடிய வில்லை. தி.மு.க ஆட்சி நீடிக்க வில்லை. கலைக் கப்பட்டது. அடுத்து எம்.ஜி.ஆர் பெயரைக் கூறி ஆட்சிக்கு வந்தார் ஜெயலலிதா. எதிரிக்கு எதிரி நண்பன் என்பதில் உறுதியான நம்பிக்கை இவருக்கு உண்டு. எனவே, அவர் விடுதலைப் புலிகளை எதிர்த்தார்.

இப்போது நாடாளுமன்றத்தில் விடுதலைப் புலிகளைத் தடை செய்ய வேண்டும், என்ற புதிய கோரிக்கைகள் எழுப்பப்படுகின்றன. இந்தக் கோரிக் கையை எழுப்புவதற்கு முன், இதுபற்றி, ஒரு தேச பக்தியுள்ள ஈழத் தமிழனின் கண்ணோட்டத்தில் நிலைமையை மேலோட்டமாகக் கூட பரிசீலிக்கா மல், இந்தக் கோரிக்கைகளை முன் வைக்கின்றார் கள். இந்திய -இலங்கை ஒப்பந்தம், தமிழர்களின் பிரச்சனைக்குத் தீர்வாகாது, என்று ஈழத் தமிழர்கள் முடிவு செய்தது ஒன்றும் மன்னிக்க முடியாத குற்றமா கிட முடியாது. தங்கள் நலனுக்கு உகந்தது எது என்பதை முடிவு செய்யக் கூடிய உரிமை, இந்திய அரசின் முடிவுகளுக்கு அப்பாற்பட்டதாக இருக்கக் கூடாது என்று கூறுவதில் நியாயம் இல்லை.

டில்லியில் ஆளும் அரசியல் வாதிகளோ, 'மேடம்' ஜெயலலிதாவோ விரும்பினாலும் சரி; விரும் பாவிட்டாலும் சரி; விடுதலைப் புலிகள் இயக்கம் ஈழத் தமிழர்களின் நம்பிக்கையையும், மதிப்பையும் பெற்ற இயக்கமாக வளர்ந்திருக்கிறது என்பது உண்மை. பெரும்பாலான ஈழத் தமிழர்கள் இந்த இயக்கத்துக்கே பேராதரவு தருகின்றார்கள் என்பதும் உண்மை. வடக்கு -கிழக்கு மாநிலத்தில் நிலை பெற்றிருக்கும் விடுதலைப் புலிகளை ஒழிப்பதில் இலங்கை அரசு, வெற்றி பெறவும் முடியாது. புலிக ளுக்கும் ராணுவத்திற்கும் இடையே எதிர்காலத்தில் யுத்தம் தொடர்ந்து நடக்கும். விடுதலைப் புலிகளும், ஈழத் தமிழர்களின் உணர்வுகளைப் பிரதி பலிக்கக் கூடிய ஒரு துடிப்பான இயக்கமாக செயற்பட்டுக் கொண்டுதான் இருப்பார்கள். ஈழத் தமிழர்களுக்கும் - தமிழ் நாட்டுத் தமிழர்களுக்கும் இடையே உள்ளது 'தொப்புழ்கொடி' உறவு! இந்தப் பின்னணியில் இலங் கையில் அமைதியை ஏற்படுத்தாமல், அங்கே என்ன நடக்கிறது என்பதை, தமிழ் நாட்டு மக்களிடம் மூடி மறைத்துக் கொண்டு காலத்தை நீட்டமுடியாது. விடுதலைப் புலிகளைத் தடை செய்வதன் மூலம் தமிழ் நாட்டுக்கும், ஈழத்துக்கும் இடையே உள்ள உறவைத் துண்டித்து விட்டால், ஈழத் தமிழர் பிரச் சினை எக்கேடு கெட்டுப் போனால் என்ன என்ற முடிவுடனேயே, தமிழ் நாட்டுத் தமிழர்கள் இருந்து விடமாட்டார்கள். இலங்கையில் தாக்குதல் தொடர்ந்து, மீண்டும் ஈழத் தமிழர்கள் அகதிகளாக தமிழ் நாட்டுக்கு வந்தால் தமிழ்நாட்டு மக்களின் அனுதாபம் அவர்கள் மீது வராமல் போய்விடாது; அந்த நிலையில் தமிழக முதல்வர் ஜெயலலிதாவும் மக்களிடையே உருவாகும் இந்த இயற்கையான அனுதாப உணர்வுகளை இப்போது போல் எதிர்த்து நிற்க முடியாது. அந்தக் காலகட்டத்தில் இப்போது போல் கடுமையாக விடுதலைப் புலிகளை எதிர்த்துக் கொண்டிருந்தால் அதற்கு எதிர்ப்புகள் இல்லாமல் போகாது. அந்த நேரத்தில் டில்லி, விடுதலைப் புலிகளுக்கு எதிராக தீவிர நடவடிக்கைகளை எடுத் தால் மக்கள் ஆத்திரம் கொண்டு பொங்கி எழுவார் கள். எரிமலையாக வெடிப்பார்கள்; எதிர்ப்புகள் வன் முறைகளாகவே இருக்கும்.

எனவே விடுதலைப் புலிகள் மீது நமக்குள்ள ஆத்திரமும், அவர்களை ஏற்கவே முடியாது என்ற சகிப்பற்ற தன்மையும் கூட திட்டமிட்ட தெளிவான பார்வையோடும், காரணங்களோடும் இருக்க வேண் டும். ஈழத் தமிழ்ப் போராளிகளும்கூட தங்களின் நிலையை நியாயப் படுத்துவதற்கு காரணங்கள் இருக் கின்றன. இனத்தின் பெருமை, தேசத்தின் போராட் டம் ஆகியவற்றின் அடிப்படையிலான உணர்வுகளுக் கிடையே இயக்க இயல் ரீதியான முரண் பாடுகள் தோன்றும் போது எது சரி, எது தவறு என்பதைக் கூட தீர்மானிப்பது கடினமாகி விடும். இந்தப் பின்ன ணியில் எடுக்கப்படுகிற முடிவுகள் புத்திசாலித்தன மாகவே இருக்க வேண்டும். ■

நன்றி: விடுதலை

## வீரம் விளையும் மண்

மன்னாரில் லெப்டினன்ட் சைமன் என்ற மாவீர னின் சகோதரி கபிரியல் கரோலின் என்பவரை அவ ரது பெற்றோர் போராட்டத்தில் தாமாகவே முன் வந்து இணைத்துள்ளனர்.

அடம்பன் தாழைக்குளத்தைச் சேர்ந்த லெப். சைமனின் பெற்றோர் அண்மையில் மன்னார் மாவட்ட மகளிர் முன்னணிப் பொறுப்பாளரிடம் இவரை ஒப்ப டைத்தனர்.

லெப். சைமன் இந்திய இராணுவத்தினருடனான மோதலில் வீரமரணத்தைத் தழுவிக் கொண்டவராவர்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இந்தியாவுடன் அமெரிக்கா முறுகுநிலை

திலகர்


ஐக்கிய அமெரிக்காவிற்கும், சோவியத் யூனியனுக்கும் இடையில் நடை பெற்ற பனிப் போர், சோவியத் யூனியனின் சீரழிவுடன் முடிவுற்ற நிலையில், அமெரிக்கா தனிப் பெரும் வல்லரசாகக் கொடி கட்டிப் பறக்கிறது. இவ்வந்தஸ்த்தை தொடர்ந்து பேணும் முயற்ச்சியில் தனக்குச் சமதையாக வேறு வல்லரசுகள் தோன்றக் கூடாதென்பதில் அக்கறையாக உள்ளது. யப்பான், ஜேர்மனி, ரஷ்ய சமஷ்டி அரசு ஆகியனவே, அமெரிக்காவின் உடனடிக் கண்காணிப்புக்கு உட்பட்ட நாடுகளாக உள்ளன.

ஈராக், லிபியா, கியூபா, வடகொரியா போன்றவை பெரும் நெருக்குதலுக்கும், சீனா, இந்தியா போன்றவை அழுத்தங்களுக்கும், உள்ளாக்கப்பட்டு வருகின்றன. வேறு நாடுகள் இராணுவ பலம் பெறுவதையும், ஏவுகணைகளைத் தயாரிப்பதையும், புதிதாக நாடுகள் அணு ஆயுதங்களை கைவரப் பெறுவதையும் தடுப்பதில் அமெரிக்கா தீவிரம் காட்டி வருகின்றது. இத்தகு அழுத்தத்திற்கு தற்போது இந்தியா உட்பட்டுள்ளது.

அமெரிக்கா தனிப் பெரும் வல்லரசாக உருவெடுத்ததுடன், நேருவால் கட்டி வளர்க்கப் பட்ட அணிசேராக் கொள்கை, சோசலிசத் தத்தவம் ஆகியனவற்றைத் தூக்கி காற்றில் வீசிவிட்டு அமெரிக்காவின் காலடியில் விழ இந்தியா தயாராய் இருந்தது. இதன் காரணமாக தனது நாட்டை பல் நாட்டு நிறுவனங்களுக்கு (MULTI NATIONAL COMPANY) திறந்து விட்டதோடு, அமெரிக்காவுடன், இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் கூட்டான கடற்படைப் பயிற்சிகளுக்கும் ஒத்துக் கொண்டது. ஆந்திர மானிலத்தில் விசாக பட்டினத் துறைமுகத்தில் அமெரிக்கத் தளம் அமைப்பதற்கும் இந்தியா அனுமதிக்க ஒத்துக் கொண்டதாக செய்தி வெளியானது. அமெரிக்காவும், பெரும் இந்தியச் சந்தையில் கண்வைத்து இந்தியாவுடன் பொருளாதார, இராணுவ ரீதியில் நெருங்கி வந்தது. பல்வேறு தொழில் நுட்ப அறிவையும், இராணுவத் தளபாடங்களையும் இந்தியாவிற்கு வழங்க ஒத்துக் கொண்டது. இலகுவான சண்டை விமானங்களைத் தயாரிப்பதற்கான தொழில் நுட்பத்தையும் கொடுக்கச் சம்மதித்தது. இத்தகைய நெருக்க நிலை ஏற்பட்ட போதும், இந்தியா தனது உதவியுடன் ஒரு அணு வல்லரசாக உருவாகுவதை அமெரிக்கா விரும்பவில்லை. இந்தியாவும், அமெரிக்காவிடம் தஞ்சமடையத் தயாராக இருந்த போதிலும், தனது இறைமையை விற்றுவிடும் நிலையை விரும்பவில்லை. இதுவே அமெரிக்க, இந்திய நெருக்கடியாக தற்போது உருவெடுத்துள்ளது.

> அமெரிக்கா தனிப் பெரும் வல்லரசாக உருவெடுத்ததுடன், நேருவால் கட்டி வளர்க்கப்பட்ட அணிசேராக் கொள்கை, சோசலிசத் தத்துவம் ஆகியனவற்றைத் தூக்கி காற்றில் வீசிவிட்டு அமெரிக்காவின் காலடியில் விழ இந்தியா தயாராய் இருந்தது.

அமெரிக்கா, நிபந்தனைகளின் அடிப்படையில் இந்தியாவுடன் தனது உறவுகளை வளர்த்துக் கொள்ள விரும்புகின்றது. சில நிபந்தனைகளை இந்தியா அனுசரித்து நடந்தாலும், தனது தேசிய பாதுகாப்பு சம்பந்தமான நிபந்தனைகளை நிறைவேற்ற அதனால் முடியவில்லை. அணு ஆயுதப் பரவல் தடுப்பு ஒப்பந்தத்தில் இந்தியா கையெழுத்திட வேண்டும் என்றும், பிராந்திய ரீதியாக அணு ஆயுதப் பரவலைத் தடுக்கும் நோக்குடன், அமெரிக்கா, ருஷ்யா, சீனா, இந்தியா, பாகிஸ்தான் ஆகியவை அடங்கிய மகாநாடு நடாத்தப்படவேண்டும் என்றும் அமெரிக்கா வலியுறுத்துகின்றது. 5 நாடுகளின் மகாநாட்டை முன்மொழிந்து, அமெரிக்கா அதனை முன்னெடுக்குமாறு செய்தது பாகிஸ்தானே. பாகிஸ்தான் அணுஆயுதம் செய்தது தெரிய வந்தவுடன், அமெரிக்கா அதற்கு கொடுத்து வந்த நிதி உதவிகளை




அமெரிக்க விமானத் தாங்கிக் கப்பல்
இந்து சமுத்திரம் அமெரிக்க ஏரி ஆகுமா?


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நிறுத்தியது. அமெரிக்காவின் நட்பை மீண்டும் பெறும் நோக்குடன், பிராந்திய ரீதியான அணுஆயுதப் பரவல் தடைக்கு 5 நாடுகளின் மகாநாட்டை பாகிஸ்தான் முன் மொழிந்தது. இம்மகாநாட்டில், இந்தியா அணுஆயுதப் பரவல் தடைக்கு கையெழுத்திடுமாறு நிர்ப்பந்திக்கப்படலாம் என்ற அடிப்படையில் இந்தியா, இம்மகாநாட்டை நிச்சயம் நிராகரிக்கும் என்று பாகிஸ்தான் எதிர்பார்த்தது. அணுஆயுதத்தை உற்பத்தி செய்யும் வல்லமை தனக்கு இருப்பதாகவும், இந்தியாவின் காரணமாகவே தான் அணு ஆயுத உற்பத்தியில் ஈடுபடுவதாகவும், இந்தியா அணு ஆயுத உற்பத்தியை நிறுத்தினால் தானும் நிறுத்துவதாகவும் அமெரிக்காவிடம் நாடகமாடி அதன் ஆதரவைப் பெற முயல்கின்றது. இந்தியா இவ்விடயத்தில் வளைந்து கொடுக்காது என்ற நம்பிக்கையில்தான் பாகிஸ்தான் இவ்வாறு செயல்பட்டு வருகின்றது. இந்தியா 5 நாடுகள் மகாநாட்டை நிராகரித்ததோடு, அணுஆயுதப் பரவல் பிராந்திய ரீதியானது அல்ல; உலகளாவியதென்றும், அணுஆயுதப் பரவல் தொடர்பாக அமெரிக்காவுடன் நேரடியாக பேசித் தீர்க்க விரும்புவதாகவும் அறிவித்தது. அணு ஆயுதங்களின் பரவல் தொடர்பாகத்தான் அமெரிக்கா வலியுறுத்துகின்றதே தவிர, அணு ஆயுதங்களை முற்றாக அழித்தல் பற்றி வாய் திறப்பதில்லை என்பது இங்கு அவதானிக்கத் தக்கது. அதாவது, அணு ஆயுத வல்லரசுகளாக தற்போது இருக்கும் நாடுகள் தொடர்ந்து அணு ஆயுத மேலாதிக்கம் செலுத்தும் நாடுகளாக இருக்க வேண்டும் என்பதே உள் நோக்கமாக உள்ளது. அதிலும் சோவியத் யூனியன் உடைந்த பின்னர், ருஷ்யா, கஸக்கிஸ்ரான், உக்ரேன், பைலோரஷ்யா ஆகிய புதிய நாடுகளில் அணு ஆயுதங்கள் தொடர்ந்திருக்கின்றன; இவற்றில், ருஸ்ய சமஸ்டியைத் தவிர்ந்த ஏனைய நாடுகளில் உள்ள அணு ஆயுதங்களை நிர்மூலம் செய்தல் வேண்டும். அல்லது ருஷ்ய சமஷ்டி அரசிற்கு மாற்றுதல் வேண்டும் என்ற ரீதியில், அமெரிக்கா அழுத்தங்களை பிரயோகித்து வருகின்றது. அணு ஆயுதங்ககளைத் தயாரிக்கும் வல்லமையுடைய தென்னாபிரிக்கா, ஈராக், வட கொரியா, லிபியா, ஈரான், இந்தியா ஆகியவற்றின் மீது பல்வேறு வகையான அழுத்தங்கள் அமெரிக்காவால் பிரயோகிக்கப்பட்டு வருகின்றன. தென்னாபிரிக்கா, அணு ஆயுதப் பரவல் தடை ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுவிட்டது. இஸ்ரேலைப் பொறுத்தவரை, அதன் மேல் அழுத்தம் மேற்கொள்ளப்படுவதில்லை. அது ஏற்கனவே அணு குண்டுகள் பலவற்றை தயாரித்து வைத்துள்ளதாகக் கூறப்படுகின்றது. குறிப்பிட்ட ஒரு சந்தர்ப்பத்தில், அணு ஆயுத நாடுகளின் கூட்டில் இஸ்ரேலும் பகிரங்கமாக இணைந்து கொள்ளும் சாத்தியக் கூறு உண்டு. அணு ஆயுத உற்பத்தி செய்யக் கூடிய ஏனைய நாடுகள், அதன் பரவலைத் தடை செய்யுமாறு வலியுறுத்தப்படலாம். இந்தியா, இத்தகைய அழுத்தத்திற்கு இணங்காதது மாத்திரமல்ல, அணு ஆயுதங்களை காவிச் செல்லக் கூடிய ஏவுகணைகளைத் தயாரித்து வருவதே அமெரிக்காவிற்கு மேலும் ஆத்திரம் ஊட்டும் செயலாக உள்ளது. பிருதுவி, அக்னி ஆகிய குறுந்தூர, இடைத்தூர ஏவுகணைகளை இந்தியா வெற்றிகரமாக பரீட்சித்துப் பார்த்துள்ளது. மேலும் ராக்கட்டுக்களையும், அதன் மூலம் வானில் ஏவி விடப்படும் செய்மதிகளையும் இந்தியா செய்துவருகின்றது. இருமுறை செய்த பரிசோதனை தோல்வியுற்றபின், அண்மையில் வெற்றிகரமாக, தானே உருவாக்கிய ராக்கெட் ஒன்றின் மூலம் செய்மதியை வானிலே ஏவியது குறிப்பிடத்தக்கது. இத்தகைய ராக்கட்டுக்களை மேலும் விஸ்தரிக்கவும், அவ்விஸ்தரிப்பின் மூலம் நீண்டதூர ஏவுகணைகளை (BALLISTIC MISSILES)ச் செய்யவும், இவ் ஏவுகணைகளில் அணு ஆயுதங்களைக் காவிச் செல்லும் வசதிகளைச் செய்யவும் இந்தியா திட்டமிட்டது. இதன் பொருட்டு ருஷ்யாவிடமிருந்து ராக்கெட் இயந்திரங்களையும், நவீனதூர ராக்கெட் பொறி நுட்பத்தையும்



வெற்றிகரமாக ஏவப்படும் அக்னி ஏவுகணை



இந்திய பிருதுவி ஏவுகணை - 'சமாதானத்திற்காக'

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்


www.tamilarangam.net

பெற முயற்சித்தது. இது அமெரிக்காவிற்கு மேலும் சினத்தைக் கிளப்பியது.

இரு நோக்கங்களுக்காக அதாவது சமாதானத்துக்காகவும், இராணுவத்திற்காகவும் பயன்படுத்தப்படும் கருவிகளை ருஷ்யா விற்கவோ, இந்தியா வாங்கவோ கூடாது எனவும், அவ்வாறு செய்தால் இரு நாடுகளுக்கும் எதிராக நடவடிக்கை எடுக்கப் போவதாகவும் அமெரிக்கா மிரட்டியது. இந்தியா அணு குண்டு செய்த போது சமாதானத்திற்காக செய்ததாக கூறியதைப் போன்று, அணு ஆயுதங்களைக் காவிச் செல்லும் கருவிகளைச் செய்வதற்கான தொழில் நுட்பங்களைப் பெறும்போதும், சமாதானத்திற்காகவே என்கிறது. ருஷ்யாவும், இந்தியாவும் அமெரிக்காவின் மிரட்டலை மீறி, ராக்கட் பேரத்தை நடைமுறைப்படுத்துவதில் முனைந்துள்ளன. அமெரிக்கா மிரட்டியது போன்று பல்வேறு நடவடிக்கைகளை இந்தியாவிற்கும் ருஷ்யாவுக்கும் எதிராகச் செய்து வருகின்றது. இந்திய விண்வெளி ஆராச்சி நிலையம், தனக்குத் தேவையான கருவிகளை அமெரிக்காவில் வாங்க முடியாதென இருவருடத் தடை விதித்துள்ளது. மேலும் இந்திய மருந்துப் பொருட்களை அமெரிக்காவில் விற்பதற்கிருந்த சலுகைகளை அகற்றி, விற்பனை வரியை அமுல்படுத்தியுள்ளது. மேலும் பல பொருளாதாரத் தடைகளை விதிக்கப் போவதாக மிரட்டியுள்ளது. இத்தகைய அமெரிக்க மிரட்டல்களின் காரணத்தினால், ருஷ்யாவும், இந்தியாவும் விலகிப்போகும் நிலையிலிருந்து மீண்டும் முன்னர் இருந்தது போல் நெருங்குவதற்கான அறிகுறிகள் காணப்படுகின்றன. பல புதிய ஒப்பந்தங்களை இரு நாடுகளும் செய்யவுள்ளதாக அறிவித்துள்ளன. இந்தியா மீண்டும், 3ம் உலக நாடுகளின் ஒற்றுமை என்ற பல்லவியை பாட ஆரம்பித்துள்ளது. அண்மையில் இந்தோனிஷியத் தலைநகரான ஜகர்த்தாவில் நடைபெறவிருக்கும் கூட்டுச் சேரா நாடுகளின் மகாநாட்டில், அமெரிக்காவின் தனி ஆதிக்கப் போக்கை, புதிய நிலைமையில் எவ்வாறு சமாளிப்பது என்பது முக்கியமாக ஆராயப் படும் எனத் தெரிகிறது. இரு முகாம்கள் என்று உலகம் பிரிந்திருந்த நிலை நீங்கியவுடன் கூட்டுச்சேரா நாடுகளின் அமைப்பின் தேவை இல்லாதொழிந்துவிடும் எனக் கருதப்பட்டது. ஆனால் போகிற போக்கைப் பார்த்தால், இனிமேல்தான் இதன் தேவை அதிகரிக்கும் எனத் தோன்றுகின்றது. அமெரிக்காவின் அழுத்தத்திற்கு இந்திய நாடாளுமன்றத்தில் கட்சி பேதமற்று எதிர்ப்பைத் தெரிவித்தனர். அமெரிக்காவின் அழுத்தத்திற்கு பணிந்து கொடுக்காது, இந்தியா எழுந்து நிற்க வேண்டும் என்று வாதாடினர். அமெரிக்காவுடனான இராணுவத் தொடர்புகளைத் துண்டிக்க வேண்டும் என்றும், கூட்டுக் கடற்படை பயிற்சியை ரத்துச் செய்ய வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளனர். ஆயினும், இந்தியா, தானும் ஒரு உலக வல்லரசாக வரவேண்டும் என்ற கனவைச் செயற்படுத்துவதற்காகவும், அமெரிக்காவின் செல்வாக்கு கொடி கட்டிப் பறப்பதாலும், வளைந்து கொடுத்துத்தான் ஆக வேண்டியுள்ளது. வளைந்து கொடுக்காவிட்டால், புதிய உலக நிலைமையில் இந்தியா சோவியத் யூனியனைப்போல் தாக்குப் பிடிக்க முடியாது உடைந்து சிதறுண்டு விடும் என்பதை அதன் கொள்கை வகுப்பாளர்கள் நன்கு உணர்ந்தே உள்ளனர். ■

**இந்தியா அணுகுண்டு செய்த போது சமாதானத்திற்காக செய்ததாக கூறியதைப் போன்று, அணு ஆயுதங்களை காவிச்செல்லும் கருவிகளைச் செய்வதற்கான தொழில் நுட்பங்களைப் பெறும்போது, சமாதானத்திற்காகவே என்கிறது.**

அணு ஆயுதங்களைக் காவும் ஏவுகணைத் தயாரிப்பில் இந்தியா.






## போர் பிரகடனம்

விடுதலைப் புலிகள் இயக்கத்தை தடை செய்ததன் மூலம் ஒட்டுமொத்தமாகத் தமிழர்கள் மீது இந்திய அரசு போர்ப்பிரகடனம் செய்துள்ளது. பொய்யான குற்றச்சாட்டுகள் மீது இந்தத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

பழ. நெடுமாறன்.
(தமிழர் தேசியஇயக்கத்தலைவர்)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**வாசகர் கடிதப் பகுதி**



# அக்கினிப்பூக்கள்

## எங்கள் மணிக்கொடி

எரிமலை ஏடு கண்டேன்
எதிரிலே பெண்ணைக் கண்டேன்
நெஞ்சம் குமுறக் கொண்டேன்
கொஞ்சம் எழுதத் துடித்தேன்.

தாலியும் பதக்கமும்
மிதக்கும் நெஞ்சத்திலே
சயனைட் குப்பி ஒன்று
தொங்கக் கண்டேன்
தூக்கம் இல்லா இரு விழிகள்
தூரத்தை நோக்கக் கண்டேன்
எதிரி அவனை சாய்த்திடவே
துரித நடை போடக்கண்டேன்
அடுப்படியில் அடங்கிக் கிடந்த
அழகுமிகு பெண்கள் எல்லாம்
அணிவகுத்து நிற்பதை நேரில் கண்டேன்
இன்னுமா தயக்கம் புலிக்கொடி
இனிதே பறக்கும் எங்கள் மணிக்கொடி

- ஞானம்பீரீஸ் -

பாராட்டுக்குரிய எரிமலை ஆசிரியர் குழுவினர்க்கு,
வணக்கம்

எரிமலை சஞ்சிகை தொடர்ந்து பெறக்கூடிய சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. "நாங்கள் தமிழில் எழுதுவோம் தமிழுக்காக எழுதமாட்டோம்." என்று பிற்போக்கு எண்ணத்தில் எத்தனையோ சஞ்சிகைகள் வெளிவருகின்றன. ஆனால் "எரிமலை"யின் ஆக்கங்கள் வெறும் எழுத்தல்ல தமிழினத்தின் விடுதலைப் பாதையை வரையும் வடிவங்கள். எரிமலையைப் போன்று ஒவ்வொரு சஞ்சிகையும் செயற்படுமானால் எம்மினத்தின் அடிமையுணர்வே அற்றுவிடும்.

அன்புடன்
மா. சுரேஷ், (ஜேர்மனி)

அன்பான எங்கள் எரிமலைக்கு

## அன்பான எரிமலையே!

புதுப்புதுப் பொலிவுடனே
மாதம் மாதம்
மலர்கின்ற
எங்கள் அன்பான
எரிமலையே! உம்
இதழை வாழ்த்தி
எழுதுகின்றேன் கவிதையொன்று.
வேலையின்றி உறங்கிக்கிடந்த
என் பேனாகூட
எரிமலையின் எழுச்சிகண்டு
எழுந்துவிட்டது
புரட்சிவழியில்.
சோர்வு கொண்ட இதயங்களை
தட்டியெழுப்புகின்ற
எரிமலையே!
விடுதலையின் உணர்வுகளை
விழிப்படைய வைக்கும்
எரிமலையே!
ஈழவிடுதலைப் பெண்மணிகளின்
பெருமையினை
எரிமலையின்
ஏட்டினிலே படிக்கையிலே
பொங்கி வரும்
விடுதலையின் உணர்வுகளால்
எரிமலையே! உம்
இதழை வாழ்த்தி
எழுதிடலாம் பலகோடி
வாழ்த்துக்களை.

அன்புடன்
எரிமலை விரும்பி
திருமதி ஜானகி சம்பந்தன்
(ஜேர்மனி)

எரிமலைக்கு,

தமிழர் புலம் பெயர்ந்து வாழும் நாடுகளில், மக்களின் உணர்வுகளைத் தட்டியெழுப்பி, தமிழீழம் என்ற தாயகத்தின் தேவையை உணர்த்தும் எரிமலைக்கு பலநூறு வாழ்த்துக்கள்.

இன்றைய எமது போராட்ட நிகழ்வில் உதிர்ந்துபோன எமது போராளிகளை, அவர்கள் வாழ்ந்த வாழ்வை நிச்சயமாக ஒவ்வொரு தமிழ் மகனும் அறிய வேண்டியதே. அந்நிகழ்வுகளுடன் இணைந்தவர்கள் வீரமரணம் அடைந்திருக்கலாம் அல்லது பல்வேறு காரணங்களால், புலம் பெயர்ந்திருக்கலாம். அப்படியானவர்கள், தங்களுடன் பழகிய வீரமறவர்களின் வீர வரலாற்றை வெளிக்கொணர்வது அவசியமானதே. இதனை எரிமலை கவனத்தில் எடுத்து, அத்துடன் இங்கு வாழும் தமிழ் மக்களும் இதனை நிவர்த்தி செய்ய முன்வர வேண்டுமென்பது எனது தாழ்மையான வேண்டுகோள்.

T. ரவி
(75019 PARIS)

தமிழ்த்தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பாரதிதாசனின் தமிழுணர்வு

இன்குலாப்

நன்றி: தளம்

புரட்சிக்கவிஞர் பாரதிதாசனுக்கு நூற்றாண்டு விழாக் காண்பதில் யாரும் ஒரு குறையும் வைத்ததாகத் தெரியவில்லை. அரசிலிருந்து, குமரி அனந்தன் வரை எல்லோரும் விழாக் கொண்டாடித் தீர்த்துவிட்டார்கள். இப்படி இவர்கள் எல்லோரும் விழாக் கொண்டாடும்படி பாரதிதாசனும் வசதியாக இறந்து போய்விட்டார்.

பாரதிதாசனை இவ்வாறு எல்லோரும் பாராட்டுவதற்கு அவரிடம் பொதுவான கூறுகள் இருக்கலாம். ஆனால் அவை பாரதிதாசனின் முழுமை அல்ல. சான்றாக 'ஒன்று தெய்வம் என்போம்' என்று எழுதியதால் அவர் இறைநம்பிக்கை கொண்டவர் என்றோ, காஷ்மீரத்தையும் கன்னியாகுமரியையும் இணைத்துப் பாடியதால், இன்று நிலவும் இந்தியாவின் அரசு முறையை ஏற்றுக் கொண்டவர் என்றோ கூறமுடியாது. ஏனெனில் பாரதிதாசனின் பாடல்களின் ஒட்டுமொத்தமான தொனி இவற்றில் இல்லை.

ஒரு காவியத்தில் நூலிழைபோல் ஓடும் கருத்தைப் பாவிகம் என்பார்கள். கம்பராமாயணத்தில் 'அறம் வெல்லும் பாவம் தோற்கும்' என்ற கருத்து நூலிழைபோல் ஓடுகின்றது. ஆயினும் காவியத்தை நடத்திச் செல்லும் போக்கில் மேற்கண்ட கருத்துக்களுக்கு மாறான கருத்துக்களைக் கொண்ட பாத்திரங்களையும் அவர் படைத்து நடமாடவிடுகிறார். இவற்றால் கம்பனுக்கு அறம் வெல்லும் பாவம் தோற்கும் என்ற கருத்துக்கும் மாறான கருத்துக்கள் உண்டு என்று நிறுவ முடியாது. அது கம்பரின் தொனிக்கு மாறானது ஆகும்.

பாரதிதாசன் எந்தச் சூழ்நிலைகளில் இறை நம்பிக்கை, இந்திய ஒருமைப்பாடு போன்றவற்றை வலியுறுத்தினார் என்பதை ஆராயாது, அவரை இறை நம்பிக்கை கொண்டவராகவும், இந்திய ஒருமைப்பாட்டில் நம்பிக்கை கொண்டவராகவும் நிறுவவும், ஒருசிலர் முயல்கின்றனர். இந்தப்பிசுறுகளில் பாரதிதாசன் இல்லை; அவருடைய முழுமையான தொனி இவற்றில் இல்லை.



பாரதிதாசன் என்ற கவிஞரிடம் மேலோங்கி நிற்கும் கருத்துக்கள் யாவை என்பதைவரையறுத்துக் கொள்வது அவசியம்; இவ்வாறு வரையறுப்பது எளிதானதும்கூட. பாரதிதாசனிடம் மேலோங்கி நிற்கும் சிந்தனைகளைப் பின்வருமாறு வரிசைப்படுத்திக் கொள்ளலாம்.

1. தமிழுணர்வு
2. பகுத்தறிவு
3. பொதுமை நோக்கு
4. பெண்ணுரிமை

பாரதிதாசன் எவற்றைப் பாடினாலும் இந்த நான்கு சிந்தனைகளையும் விட்டுக் கொடுத்தவரில்லை எனலாம். இந்த நான்கு சிந்தனை நிலைகளில், தமிழுணர்வு என்ற ஒன்றை மட்டுமே இந்தக் கட்டுரை ஆராய முனைகின்றது.

**மொழியுணர்வு:** தாய்மொழியானது கருத்துக்களைப் பரிமாறிக் கொள்ள உதவும் வெறும் கருவி என்ற சிந்தனை சில மொழிவாணரிடம் இருந்து வருகிறது. இந்தச் சிந்தனையைப் பெருவாரியான பொதுவுடைமைத் தலைவர்களும் ஏற்றுக் கொள்கின்றனர். வலியுறுத்தியும் வருகின்றனர்.

எந்த ஒரு கருவியும் மனிதனை விட்டுப் பிரித்து வைத்துப் புழங்கக் கூடியதாகவே இருக்கின்றது. கருவிகளைக் கையின் நீட்சி என்று ஹெகல் கூறினார். ஆயினும் அது உடலுக்கு அப்பாற்பட்ட ஒன்றாகவே இருந்து வருகின்றது. எந்த ஒரு கருவியும் உணர்வில் பெருத்த மாறுதலை விளைவிக்கக் கூடியதாக இல்லை. ஒரு கவிஞனுக்குத் தாளும் பேனாவும் உணர்வு தருபவை அல்ல. அவனது அனுபவத் தாக்கமே உணர்வு தருகின்றது.

மொழியைப் பொறுத்த மட்டிலும் அது மனிதனது இயல்பாக இருக்கின்றது. பழகிய தாய் மொழி அவனால் ஒரு கருவியைப் போலக் கழற்றி வைக்கப்படக் கூடியதல்ல. தாய்மொழிச் சூழலை விட்டு விலகிச் சென்றவர்கள் இதற்கு விதிவிலக்குகளாகத் தோன்றக் கூடும். ஆயினும் அவர்களுக்கு விலகிய சூழலில் எந்த மொழி கருத்துக்களைப் பரிமாற வாய்க்கப் பெறுகிறதோ அந்த மொழி அவ்வாறு எடுத்துப் புழங்குவதாக, ஒரு கருவியாக இருக்காது. அது அவரது கருத்துப் பரிமாற்றத்திற்கான இயல்பானதாகவே மாறிவிடும். மேலும் இத்தகைய விதிவிலக்குகளும், ஒரு மொழி பேசும் பெரும்பான்மையினரை ஆராயப் பயன்படாது போகலாம்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## முயற்சி

### அதிரடிப்படை முகாமில் விடுமுறை வழங்குகின்றனர்.

அம்பாறை மாவட்டத்தில் சுற்றி வளைப்புக்களின் போது கைது செய்யப்பட்டு முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டிருந்த தமிழ்க் கைதிகளை புத்தாண்டு தினத்தன்று கைச்செலவுக்கு பணமும் கொடுத்து விசேட அதிரடிப் படையினர் விடுமுறை வழங்கி மூன்று நாட்களின் பின் வருமாறு பணித்திருந்தனர்.

இவ்வாறு விடுமுறையில் சென்ற தமிழ்க் கைதிகள் மூன்று நாட்கள் குடும்பத்தாருடன் சந்தோசமாக இருந்து விட்டு மீண்டும் முகாமிற்கு சென்றுள்ளனர்.

திரும்பிச் சென்றவர்களுக்கு படையினரால் அறிவுரையும் வழங்கப்பட்டதாம். புலிகள் உங்களைக் கைது செய்தால் விடுமுறை தருவார்களா? கொன்று விடுவார்கள், பணம் பறிப்பார்கள். அவர்களிடமிருந்து உங்களைப் பாதுகாக்கத்தான் சண்டையிடுகிறோம் என கைது செய்யப்பட்டமைக்கு நியாயம் கற்பிக்கப் பட்டதாம்.

புலிகளின் போராட்டத்தை ஆயுத பலத்தால் அழிக்க முடியாது என்பதை அறிந்த அதிரடியினர், புலிகளுக்கு மலைபோல் இருக்கும் மக்கள் சக்தியைச் சரித்து மக்களிடமிருந்து புலிகளை அந்நியப்படுத்துவதற்காக அம்பாறை மாவட்டத்தில் தம் அதிரடி நடவடிக்கைகளில் இறங்கியுள்ளனராம்.

தாய்மொழி என்பது ஒரு மனிதனின் இயல்பு என்று சொல்லும் பொழுது அது கருத்துப் பரிமாற்றத்துக்கான இயல்பு மட்டுமன்று; கருத்து வளர்ச்சிக்கான இயல்பும் ஆகும். கருத்து என்பது உணர்வு, அனுபவம் ஆகியவற்றின் விளைவு. உணர்வும் அனுபவமும் உடல், புறவுலகத்தோடு கொள்ளக்கூடிய தொடர்பால் மட்டுமே வாய்க்கப் பெறுபவை. அவை ஐம்புலன்களின் கூட்டுத் தொகை. இவற்றால் மொழி என்பது ஒரு கருவியைப் போலப் புறத்தே நின்று செயல்படாது, அது புலன்களாலும், அனுபவத்தாலும் செயற்படக்கூடியதாக அமைகின்றது. இதனால் எந்த ஒரு கருவியையும் போலல்லாது அது உணர்வில் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றது. மனிதனது ஆறாவது புலனாக மொழியைத்தான் நிறுத்தத் தோன்றுகின்றது. ஏழாவது புலனாகத்தான் பகுத்தறிவை நிறுத்தத் தோன்றுகின்றது.

ஒரு கருவி எனக்கு உணர்வுகளைத் தோற்றுவதில் மிகக் குறைந்த பங்கே ஆற்றுகின்றது. ஆனால் ஒரு சொல் எனக்கு மிகப் பெரிய உணர்வுக் கிளர்ச்சியை ஊட்டுகின்றது. என்னை நீங்கள் அறிய வேண்டியதில்லை; என்மீது ஒரு கல்லெடுத்து வீச வேண்டியதில்லை. மாறாக ஒரு சொல்லை நீங்கள் என்மீது வீசுங்கள். உங்களைக் கொன்று தீர்க்க நான் ஆயத்தமாகி விடுவேன். வேறொரு சொல்லை எனக்குச் சொல்லுங்கள்; உங்களை நான் ஆரத்தழுவ முன்வருவேன். கருவிக்கு இத்தகைய உணர்வுக்கிளர்ச்சிகளை ஏற்படுத்துவதெல்லாம் சாத்தியமா?

இந்தக் காரணங்களால் மொழி என்பது ஒரு தேசிய இனத்தின் உணர்வு பூர்வமான அடையாளமாக இருந்து வருகின்றது. ஒரு மொழியை மற்றொரு மொழியின் மீது திணிப்பது வெறும் பொருளாதார நலன்களை மட்டும் கருதிச் செயற்படக்கூடியது மட்டுமன்று. இத்திணிப்பு முயற்சியில் பண்பாட்டு மேலாதிக்க உணர்வும் மேலோங்கியுள்ளது. பாரதிதாசனின் தமிழுணர்வை இந்தப் பின்புலத்தில் வைத்துப் புரிந்து கொள்ள வேண்டும்.

தமிழுரிமைப் போர் என்பது பாரதிதாசனிடமிருந்து தொடங்கவில்லை. அது பக்தி இயக்கக் காலகட்டத்திலேயே தொடங்கிவிட்டது. சமண, பௌத்த சமயங்களுக்கு எதிரான பக்தி இயக்கத்தின் அடிப்படைக் கூறுகளில் தமிழுணர்வும் ஒன்றாக இருந்து வந்தது. 'அதூஉஞ் சாலு நற்றமிழ் முழுதறிதல்' என்று மோசிகீரனாரின் புறப்பாட்டில் தெறித்த தமிழ்ப் பொறி ஊதி வளர்க்கப் பட்டது பக்தி இயக்கக் காலகட்டத்தில்தான். அதன் பிறகு அது தமிழ்வாணர் நெஞ்சில் அணையாமல் கனன்று கொண்டிருந்தது. அந்த அளவுக்கு வேற்று மொழித் தாக்குதல்களும் தமிழ்மொழி மீது நீடித்துக் கொண்டிருந்தன; இருக்கின்றன.

இந்த நூற்றாண்டில் அந்தக் கனலின் பெரு நெருப்பாக

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மூண்டது பாரதிதாசனின் தமிழுணர்வுப் பாடல்கள் எனலாம். பாரதிதாசன் ஒரு பகுத்தறிவுப் பாவலர்; ஆயினும் தமிழ்மீது பாரதிதாசன் கொண்ட பற்று, கடவுள்மீது பக்தர்கள் கொண்ட பற்றைக் காட்டிலும் தீவிரமானது. ஆழ்வார்கள் கண்ணனைப் பல நிலைகளில் வைத்துப் பாடியதைக் காட்டிலும் கூடுதலாகப் பாரதிதாசன் தமிழைப் பாடி இருக்கின்றார். பக்தி இயக்கக் காலகட்டத்தில் நாயன்மார்களும், ஆழ்வார்களும் சிவனையும், கண்ணனையும் தங்கள் போராட்டத்திற்கான இறுதி இலக்குகளாக முன்னிறுத்தினார்கள். பாரதிதாசனுக்குத் தமிழும், தமது போராட்டத்திற்கான இறுதி இலக்காக இருந்தது. தமிழ் உணர்வு என்பது அவரது பகுத்தறிவு வாதத்தையும் மிஞ்சி நின்றது.

தமிழ் மொழியை அமிழ்துடன் ஒப்பிடுவது என்பது தமிழ் இலக்கிய மரபு. 'இருந்தமிழே உன்னால் இருந்தேன் இமையோர் விருந்தமிழ்தம் என்றாலும் வேண்டேன்' என்று தமிழ் விடு தூதும், 'தெள்ளூற்ற தமிழ் அமுதின் சுவை கண்டார் இங்கு அமரர் சிறப்புக் கண்டார்' என்று பாரதியும் பாடியது இந்த இலக்கிய மரபு பற்றித்தான். 'அமுதம்' என்பதற்குப் பகுத்தறிவு வாதத்தால் விளக்கம் சொல்ல முடியாது. ஆயினும் பகுத்தறிவு பாவலரான பாரதிதாசனும் இந்தத் தொன்மைக் குறியீட்டை ஏற்றுக் கொள்கின்றார். 'தமிழுக்கும் அமுதென்று பேர் -அந்தத் தமிழ் இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்' என்றும், 'இனிமைத் தமிழ் மொழி எமது- எமக்கு இன்பந்தரும்படி வாய்த்த நல் அமுது' என்றும் பாடுகின்றார். தமிழ் என்ற உணர்வுக்கு பாரதிதாசன் ஆட்படும் பொழுது அவர், பகுத்தறிவை அளவு கோலாகக் கொள்ளவில்லை. இதற்குக் காரணம் என்ன?

அடிமைத்தனத்தைப் பொறுத்துக் கொள்ளாத விடுதலை உணர்வே பாரதிதாசனை இவ்வாறெல்லாம் பாட வைத்தது. நிலமானியத்துக்கும் முதலாளியத்துக்கும் அடிபணியாத அவரது புரட்சி மனப்பான்மை பிற மொழி ஆதிக்கத்துக்கும் அடிபணியவில்லை. தமிழ் மொழியின் மீது சுமத்தப் படும் வட மொழி, இந்தி, ஆங்கிலம் முதலிய அனைத்துத் தளைகளையும் நொறுக்க முற்படுகின்றார். விடுதலை உணர்வை முழுமையாக வளர்த்துக் கொண்டவன் எந்தத் தளைகளையும் பொறுத்துக் கொள்ளமாட்டான். இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) போன்ற கட்சிகளின் தலைமை பாரதிதாசனின் இந்தப் பண்பாட்டுப் புரட்சி உணர்வைப் புரிந்து கொள்ளத் தவறின. அதனால் பாரதியைப் பாராட்டிய அளவுக்குப் பாரதிதாசனைப் பாராட்டவில்லை. பாரதி தொடக்கத்தில் கொண்ட விடுதலையுணர்வுடன் 40-களுக்குப் பிறகும் வாழ்ந்திருப்பாரேயானால், பாரதிதாசனின் மொழியுணர்வோடுதான் அவரும் தமிழைப் பாடியிருப்பார்.

தமிழுணர்வு, திராவிட உணர்வு, தமிழ் தேசிய இனத்தின் விடுதலை ஆகியவற்றை மேற்கண்ட கட்சிகள் குறுகிய மனப்பான்மையின் வெளிப்பாடுகளாகக் கருதின; கருதுகின்றன. இந்தக் கட்சிகள் உயர்த்திப் பிடிக்கும் இந்திய ஒருமைப்பாட்டுக்கு எந்த ஒரு வரலாற்று அடிப்படையும் இல்லை என்பதை இவை ஒப்புக் கொள்ளவில்லை.

மார்க்சீய-லெனினியத்தை உதட்டளவில் மட்டுமே உச்சரிக்கும் இக் கட்சிகள், தேசிய இனத்தின் உரிமைகள் குறித்து இம் மூலவர்கள் வழங்கிய வளமான கருத்துக்களை இருட்டடிப்பும் செய்கின்றன.

ஒரு வாதத்துக்காக, மார்க்சும், லெனினும் தேசிய இனங்களின் விடுதலை குறித்து ஏதும் சொல்லவில்லையென்றாலும், இது பற்றி ஆராயவேண்டியது பொதுவுடைமையாளர்களின் கடமையாகும். ஏனெனில் இன்றைய கட்டத்தில் இந்திய துணைக் கண்டத்தில் எந்தவொரு முற்போக்கு இயக்கத்தாலும் புறக்கணிக்கப்பட முடியாத ஒரு பிரச்சனையாக தேசிய இனப் பிரச்சனை வளர்ந்துள்ளது. இந்தப் பிரச்சினையின் நியாயத்தை உணர்ந்து இது தொடர்பான கருத்துக்களையும், போராட்டங்களையும் வளர்த்தெடுத்துச் செல்வதுதான் இந்திய அளவில் மார்க்சியத்தைச் செழுமைப்ப


## தேசிய மக்கள் என்றால் என்ன ?

பொதுவான அன்பினால் பிணைக்கப்பட்ட, மனித சமூகத்தின் ஒரு பகுதியை தேசிய மக்கள் என்ற வரையறைக்குள் வைக்கலாம். இத்தகைய அன்பு இவர்களுக்கும் மற்ற மக்களுக்கும் இடையில் இருப்பதில்லை. இவ் அன்பு, தமக்குள், சுயவிருப்பின் அடிப்படையில், கூட்டுறவுடன் செயற்படுவதற்கும், ஒரு அரசாங்கத்தின் கீழ் இருக்க விரும்புவதற்கும் வழி வகுக்குகின்றது. இத்தேசிய உணர்வு பல்வேறு காரணிகளால் உருவாகின்றது. ஒரு இனம் அல்லது பரம்பரை என்ற தாக்கத்தினால் இருக்கலாம். அச் சமூகத்தின் மொழி, மதம் என்பனவும் இத்தகு அன்புக்குப் பெரிதும் துணையாய் இருக்கின்றது. புவியியல் எல்லைகளும் ஒரு காரணியாகலாம். ஆனால், இவை எல்லாவற்றிலும், முன்னைய அரசியல் நிகழ்வுகளுடன் தம்மை அடையாளம் காணுவதே மிக வலிமையான காரணமாம். தமக்கெனத் தேசிய வரலாறு ஒன்றைக் கொண்டிருத்தலும், அவை பற்றி அச்சமூகம் கொண்டிருக்கக்கூடிய பழம் நினைவுகளும் முக்கியமானவை. கடந்த காலத்தில் நடந்த பொதுச் சம்பவங்கள் குறித்து, கூட்டாக அச்சமூகம் கொள்ளுகின்ற பெருமைகளும், அவமானமும், மகிழ்ச்சியும், கவலையும் இவ் அன்புப் பிணைப்பை ஏற்படுத்துகின்றன.

*ஜோன் ஸ்ருவட் மில். பிரநிதித்துவ அரசாங்கம் பற்றிய கருத்துக்கள். லண்டன் 1872.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



டுத்துவதற்கான முயற்சியாக அமையும். ஒன்றுபட்ட பொதுவுடமைக் கட்சியாக இருந்த போது இப்பிரச்சினை இக் கட்சியினரது நிகழ்ச்சி நிரலில் இருந்தது. அதன் பிறகு ஆர். எஸ். எஸ்ஸின் அகண்ட பாரத வெறிக்கு இவர்கள் பையப் பைய ஆளாகி விட்டார்கள். தேசிய இனப்பிரச்சினையில் மட்டுமல்ல, மேல்சாதிய ஆதிக்கத்தின் அடிப்படையாக விளங்கும் பார்ப்பனியத்தை எதிர்ப்பதிலும் இவர்கள் வலதுகளின் வலதுகளாகத் திரிந்து போய்க் கிடக்கின்றார்கள்.

அனைத்துலகப் பாட்டாளி வர்க்கத்தின் ஒற்றுமையை முன்மொழிந்த மார்க்சும், லெனினும் தேசிய இனம் விடுதலைக்காகப் போராடும் பொழுது அதைப் புறக்கணிக்கவில்லை; அந்த நியாயத்தை எதிர்க்கவில்லை. அதற்காக வரிந்து கட்டிக் கொண்டு வாதாடியும் இருக்கின்றார்கள்.

இங்கிலாந்திலிருந்து அயர்லாந்து பிரிந்து செல்வதை இறுதியில் மார்க்சு ஒப்புக்கொண்டார். அயர்லாந்தை இங்கிலாந்து அடிமைப்படுத்தியதை, இங்கிலாந்து புரிந்த அருவறுக்கத்தக்க குற்றங்களுக்கெல்லாம் தலையாய குற்றமாக உணர்ந்தார். ருஷ்யப் பாட்டாளி வர்க்கத்தின் ஒற்றுமையையும் வெற்றியையும் முன்னிறுத்திய லெனின், தேசிய இனங்களின் தன்னாட்சி உரிமை (சுயநிர்ணய உரிமை) யை ஏற்றுக் கொண்டார்.

தன்னாட்சி உரிமை என்பதற்கு லெனின் தரும் விளக்கத்தை ஒவ்வொரு மார்க்சிய வாதியும் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

"சுயநிர்ணய உரிமை என்றால்....... ஒரு மத்திய பாராளுமன்றத்தில் பிரச்சினைக்குத் தீர்வுகாண வேண்டும் என்று அர்த்தம் இல்லை; பிரிந்து போகும் சிறுபான்மையினருடைய பாராளுமன்றத்தில் அல்லது சபையில், அல்லது அவர்களுக்கிடையில் நடத்தப்படும் பொதுமக்கள் வாக்கெடுப்பில் தீர்வுகாண வேண்டும் என்பதுதான் அர்த்தம். ஸ்வீடனிலிருந்து நார்வே பிரிந்த பொழுது (1905ல்) நார்வே மட்டும் தான் அதை முடிவு செய்தது....

அரசின் எல்லைகளுக்குள் எந்தவொரு தேசிய இனத்தையும் பலவந்தமாகப் பிடித்து வைத்திருப்பதை அறவே ஒதுக்கிவிடும் ஒரு ஜனநாயகம் வேண்டுமென்று பாட்டாளி வர்க்கம் கோருகிறது.

(தேசிய இனப்பிரச்சனையும், பாட்டாளிவர்க்க சர்வதேசியமும், பக், 13)

பாரதிதாசனும் அவர் சார்ந்திருந்த திராவிட இயக்கமும் தனி நாடு கோரியதை பிரிவினை என்கிறார்கள். இதே இயக்கம் திராவிட நாடு என்ற கோரிக்கையிலிருந்து வளர்ந்து தமிழ் நாடு என்ற உண்மை நிலையை வந்தடைந்தது. பாரதிதாசனிடமும் இந்த வளர்ச்சிப் போக்கைக் காண முடியும். ஆயினும் இந்தக் கோரிக்கையை இவ்வியக்கத்தினர் பிரிவினைக் கோரிக்கையாகக் கருதவில்லை. விடுதலைக் கோரிக்கையாகவே கருதினர். ஏனெனில் இன்று ஒன்றுபட்ட நாடு என்று நிறுத்தப்படும் இந்த நிலப்பரப்பு, ஆங்கிலேயர் வருகைக்கு முன்பு ஒரே தேசிய இனம் என்ற அடிப்படையில் ஒன்றுபட்டு இருந்ததில்லை. ஆங்கிலேயரால் துப்பாக்கி முனையில் இந்த இணைப்பு ஏற்படாமல் இருந்திருக்குமேயானால், இப்பகுதி ஐரோப்பா இன்று இருப்பது போல பல நாடுகளாகத் தான் உருவாகியிருக்கும். ஆங்கிலேயரின் சுரண்டல் வசதிக்காக வன்முறையின் அடிப்படையில் ஏற்பட்ட இந்த இணைப்பு இன்று பார்ப்பனிய, பனியாக்களின் சுரண்டல் வசதிக்காக வன்முறையின் மூலமாக நீடித்துக் கொண்டிருக்கிறது.

விடுதலையை நேசிக்கும் எவனும் இந்தச் சுரண்டல்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அமைப்புக்கு ஒப்புதல் தெரிவிக்க முடியாது. முன்னரே விளக்கியதுபோல பாரதிதாசன் சமுதாய, பொருளாதார அடிமைத்தனங்களை எதிர்த்தார். அந்த வகையில் மொழி அடிமைத்தனத்தையும் எதிர்க்கிறார்.
அவருடைய தமிழ் உணர்வை தமிழ் தேசிய இனத்தின் விடுதலை உணர்விலிருந்து பிரித்துப் பார்க்க முடியாது. தேசிய இனத்தின் விடுதலைக்காகவே அவர் மொழி உணர்வை உரக்கப் பாடுகிறார். நாமக்கல் இராமலிங்கம் பிள்ளை, தேசிக விநாயகம் பிள்ளை, பிற்காலக் கண்ணதாசன் போன்றோர் தமிழுணர்வை உயர்த்திப் பாடியிருக்கின்றனர். ஆயினும் அது தமிழ்தேசிய இனத்தின் விடுதலையோடு ஒன்றியதன்று, தமிழ்த் தேசிய இனத்தின் விடுதலையைப் புறக்கணித்து விட்டு, தமிழ் உணர்வை இசைப்பது என்பது போலித்தனமானது. ஏனெனில் இன்று அடிமைப்பட்டிருக்கும் தேசிய இனங்களில் தமிழ் தேசிய இனமும் ஒன்று.
இன்று அடிமைப்படுத்தப்படும் மொழிகளில் தமிழும் ஒன்று. தமிழை ஒப்புக்குப் பாராட்டுவது அதன் உண்மையான விடுதலைக்கு வழிவகுக்காது. தேசிய இனத்தின் அடிமைத்தனத்தைக் கருத்திற்கொள்ளாது, அதன் மொழியை மட்டும் பாராட்டுவது உண்மையான பாராட்டும் ஆகாது. அம்மொழி பேசும் மக்களின் ஆதரவைப் பொய்மையின் அடிப்படையில் பெறுவதற்கான முயற்சியே ஆகும்.

இந்த வகையில் பாரதிதாசனின் தமிழுணர்வு என்பது மொழி விடுதலையின் உணர்வு ஆகும். இன்னும் ஆழ்ந்து நோக்கினால் தமிழ்த் தேசிய இனத்தின் விடுதலைக்கான உணர்வு ஆகும். அவருடைய கவிதைகளில் மானுடத்தின் முழு விடுதலைக்கான உணர்வுகள் அனைத்தும் உண்டு. அதில் முதன்மையாக நிற்பது தமிழ் தேசிய இனத்தின் விடுதலை உணர்வே. அது இக்காலத்தில் கட்டாயம் என்பதை தெற்கிலிருந்து எழும் புகை மண்டலம் உறுதி செய்கிறது. ■

# கட்டுமானம்

யாழ்ப்பாணக்குடா நாட்டின் இன்றய சீனித்தேவையில் நாம், தன்னிறைவை அடைய 30,000 தொழில் வல்லுநர்கள் பதநீர் உற்பத்தியில் ஈடுபடவேண்டும். 1972ல் 12,000 தொகையாக இருந்த பனந்தொழில் வல்லுனர்கள் தொகை 1991இல் 6,000 பேராக வீழ்ச்சியடைந்துள்ளது. சமுதாயத்தில் குறிப்பிட்ட ஒருபகுதி மக்கள் மட்டுமே மேற்கொண்டுவரும் பனந்தொழில் அனைவராலும் தேசிய உற்பத்தியாக மேற்கொள்ளப்பட வேண்டுமென்பதையும் புதிய தொழில்நுட்ப உத்திகள் புகுத்தப்பட வேண்டுமென்பதையும் ஒன்றியம் கவனத்தில் கொண்டுள்ளது. இந்த அடிப்படையில் பனந்தொழில் வல்லுனர்களுக்கான "சுய தொழில் பயிற்சி நெறி" ஒன்றியத்தால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. வேலை வாய்ப்புகள் இல்லாதிருக்கும் எமது பிரதேசத்தின் பெருமளவு இளைஞர்களுக்குத் தொழில் வாய்ப்பையும் அதன் மூலம் அதிக அளவிலான வருமானத்தைப்பெறும் வழிகளையும் இப்பயிற்சி நன்கு புலப்படுத்துகின்றது.

பனந்தொழில் வல்லுநர் பயிற்சியின் 1992 ஆம் ஆண்டின் புதிய பயிலுனர்களின் பயிற்சி அனுமதியும் ஆரம்பமும் யாழ்ப்பாணப் பல்கலைகழகத் துணைவேந்தர் பேராசிரியர் த. துரைராசாவினால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

வடமராட்சி, சிறிபுரம் பனைப்பயிற்சி நிலையத்தில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் வடமராட்சிப் பகுதி தளபதி திரு. செல்வம் அண்ணு, யாழ்ப்பாண மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் (பனம்பொருள்) T. சபாரெத்தினம், தமிழீழ விடுதலைப் புலிகள் நிதிப்பிரிவு மு. செல்வரத்தினம் மற்றும் தெ. ப. பொ. கூட்டுறவுச்சமாசம், தெ. ப. பொ. உ. வி. கூட்டுறவுச்சங்கங்கள், பனை அபிவிருத்திச்சபைகளின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

1991ஆம் ஆண்டின் பனந்தொழில் பயிற்சியைப் பூர்த்தி செய்த பனந்தொழில் வல்லுனர்களின் சான்றிதழ் வழங்கலும் தமிழீழ ஆய்வு நிறுவன பொறியியல் பகுதியினரால் உருவாக்கப் பெற்ற பனைமரம் ஏறும் பொறியின் செயற்பாடும் இந்த நிகழ்வில் இடம் பெற்றன. பனை, தென்னை வள அபிவிருத்தி ஒன்றியத்தின் சிறிபுரம் பனைப்பயிற்சி நிலையம் நடாத்தும் இத்தொழில் வல்லுனர் பயிற்சியில் நடப்பாண்டில் 50 பயிற்சியாளர்கள் அனுமதி பெற்றுள்ளனர்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஓநாயும் ஆட்டுக்குட்டியும்

ஈசாப் குட்டிக் கதை

ஓர் ஆட்டுக்குட்டி ஒரு கால்வாயில் தண்ணீர் குடித்துக்கொண்டிருந்தது. அதை ஒரு பசியுள்ள ஓநாய் பார்த்தது; ஏதாவது காரணம் காட்டி அதைத் தின்றுவிட விரும்பியது.

"நான் தண்ணீர் குடிக்கப் போகும்போது நீ தண்ணீரைக் கலக்கும்படி ஆயிற்றா?" என்று கோபத்தோடு ஓநாய் கேட்டது ஆட்டுக்குட்டியை.

"மன்னிக்கவேண்டும். நீங்கள் இருக்கிற இடத்திலிருந்துதானே இங்கே ஓடி வருகிறது. நான் எப்படிக் கலக்க முடியும்?" என்று பவ்வியமாகக் கேட்டது.

"அது சரி, ஆனால் ஒரு வருஷத்திற்கு முன்பு என்னை நீ திட்டினாயாமே?" என்றது ஓநாய்.


"என்னை நம்புங்கள், நான் பிறந்தே ஆறு மாதங்கள்தான் ஆயிற்று" என்று சொல்லிற்று ஆட்டுக்குட்டி.

"அப்படியானால் உன் சகோதரன் என்னைத் திட்டியிருக்க வேண்டும்."

"எனக்குச் சகோதரர்கள் யாரும் இல்லையே!"

"உங்கள் கும்பலில் யாராவதுதான் சொல்லியிருக்க வேண்டும். வெறும் நொண்டிக் காரணங்கள் சொல்லி மழுப்பவா பார்க்கிறாய்?" என்று கூறிக்கொண்டே ஓநாய், ஆட்டுக் குட்டியின்மீது பாய்ந்து அதைக் கொன்றுதின்றது.

**தீயவர்கள் தங்கள் தீய செய்கைகளுக்கு ஏதாவது ஒரு சாக்குப் போக்குச் சொல்லுவார்கள்.**




நன்றி ராணி 17-5-92

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# குடியேற்றம்

## இன்னுமொரு யுத்த முனை

தமிழர் தேசிய இனப்பிரச்சனை கூர்மையடைந்து, மாபெரும் போராட்டமாக விரிவுபட்டுள்ள இன்றைய நிலையில், தமிழர் தேசியப் இனப் பிரச்சனையைத் தீர்த்து வைக்கின்ற ஆர்வமேலீடு கொண்டவர்களாக சிங்களத்தலைவர்கள் வெளிப் பார்வைக்கு தோற்றமளிக்க முயல்கின்றனர்.

தமிழ் மக்களின் பிரச்சனையை, ஸ்ரீலங்காவின் ஒற்றையாட்சிக்குள் சமாதான முறையில் தீர்த்து வைக்க, வட்டமேசை மாநாடுகள், சர்வகட்சி மாநாடுகளைக் கூட்டிய சிங்கள இனவாத ஆட்சியாளர்கள் தற்பொழுது, பாராளுமன்ற தெரிவுக் குழுவைக் கூட்டி வைத்து வேடிக்கை காட்டுகின்றனர். நீண்டகாலமாக, எதுவித பயனுமற்ற முறையில் காலத்தை விழுங்கி வருவதுடன், உலக அரங்கில் சமாதானப் பிரியனாக சிறீலங்கா அரசைக்காட்ட இம் முயற்சி உதவக் கூடும்.

போக்குக் காட்டும் இத்தகு தந்திர அரசியல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படும் அதே காலகட்டத்தில், தமிழ் மக்களின் தேசிய விடுதலைப் போராட்டத்தை முற்றாக அழித்தொழிக்கும் செயற்பாடுகளும் துரிதமாக மேற்கொள்ளப் படுகின்றன.

தமிழர் தாயகப்பகுதி மீது நீண்டகாலமாக, தொடர்ச்சியான திட்டமிட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டு, தமிழர்களின் பாரம்பரிய பிரதேசத்தை சீரழிப்பது, துண்டாக்குவது, ஆக்கிரமிப்பதே சிங்கள ஆட்சியாளர்களின் பிரதான கோட்பாடாக உள்ளது.


### ஒரு நோக்கம் இரு பாதை

தீவிர, அசுரத்தன்மையான இராணுவ நடவடிக்கையை, பிரதான தமிழர் எதிர்ப்பு அணுகுமுறையாக வரிந்து நிற்கும் ஸ்ரீலங்கா அரசு, தமிழர் தாயகத்தை சிதைத்து, துண்டாடி அபகரித்துத் தொடர் சிங்களக் குடியேற்றத் திட்டங்களையும் மேற்கொள்ளுவதை தனது இரண்டாவது பயனுள்ள வழியாகக் கையாள்கின்றது. சிறீலங்கா இராணுவத்தினர், விடுதலைப் புலிகள் மீதான இராணுவ நடவடிக்கை என்ற பெயரில், தமிழ் மக்களை தாக்கி அழித்து, சொந்த நிலங்களில் இருந்து அவர்களை விரட்டியடித்து , அதே நிலங்களில் சிங்களக் குடியேற்றங்களைச் செய்து வருகின்றனர்.

தமிழ் மக்கள் மீதான இராணுவ நடவடிக்கைகளுக்கு, புலிகள் மீதான தாக்குதல் ஒரு போர்வையாய் அமைவது போல், சிங்களக் குடியேற்றங்களுக்கு, அபிவிருத்தித் திட்டம் ஒரு வசதியான திரைமறைப்பாக உள்ளது.

சடையர்

> தமிழர் தாயகத்தை கபளீகரம் செய்ய வேண்டும் என்பதில் சிங்கள அரசியல்வாதிகள், புத்தி ஜீவிகள், உயர் அரச அதிகாரிகள் என்போருக்கு இடையில் கருத்து வேறுபாடு கிடையாது. தமிழர் தாயகத்தை ஆக்கிரமிப்பதும், சிதைப்பதுமே, தமிழர் போராட்டத்தை அழித்தொழிக்க ஒரேவழி என்பது அவர்களின் கருத்தாகும்.




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## பழமை வாய்ந்த திட்டங்கள்

தமிழர் தாயகத்தில் சிங்கவர்களை குடியேற்றும் நடவடிக்கையானது, பிரித்தானியரிடம் இருந்து இலங்கை சுதந்திரம் அடைந்த காலத்தில் இருந்து மேற்கொள்ளப் பட்டுவரும் ஒரு நீண்ட கால நடைமுறையாகும். 1948 இல் இருந்து சிங்கள ஆட்சியாளர்களதும், உயர் அதிகாரிகளினதும், சிங்களப் புத்திஜீவிகளினதும் இதற்கான முயற்சிகள் பல கட்டங்களில் மேற்கொள்ளப் பட்டு வந்திருக்கின்றன.

தமிழ்த் தாயகத்தை பல துண்டுகளாக பிரித்துவிடும் நோக்குடனான அபிவிருத்தித் திட்டங்கள் வகுக்கப்பட்டன. ஆற்று வடிநில அபிவிருத்தி, விவசாய அபிவிருத்தி என்பதன் பேரில் தமிழர் தாயகத்தின் ஒடுங்கிய பகுதிகளை கூறு போட திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன. கடற்பகுதிக்கும், சிங்கள நிர்வாகப் பகுதிக்கும் இடையே அமைந்திருக்கும் இப்பகுதிகளை கூறு போடுவதன் மூலம் தமிழர் தாயக நிலத் தொடர்பை துண்டித்து, அவர்களின் வலிவையும், இறுக்கத்தையும் கூறு போட சிங்களத் தலைவர்கள் திட்டமிட்டுச் செயல்பட்டனர்.

இதற்கென மல்வத்து ஓயா, யான் ஓயா, மதுறு ஓயா ஆகிய ஆற்றுவடி நிலங்களை, மகாவலி கங்கை அபிவிருத்தித் திட்டத்துடன் இணைத்து, அப்பகுதிகளில் சிங்களவர்களைக் குடியேற்றி, தமிழர் தாயகத்தை துண்டாடலாம் என திட்டமிட்டுச் செயல் பட்டனர். இத்திட்டத்தின்பிரகாரம், ஆயிரக்கணக்கில் சிங்களவர்கள் குடியமர்த்தப் பட்டனர்.

ஆனால், தமிழீழ விடுதலைப் போராட்டத்தினதும், தமிழீழ விடுதலைப் புலிகளினதும் வலிமையான உயிர்ப்பு, சிங்களத் தலைவர்களது திட்டத்திற்கு பெரும் தடையாகவும், தலையிடியாகவுமே அமைந்தன. இத்திட்டத்தின் சூத்திரதாரியான எம். எச். குணரட்னா, தமது யான் ஓயா, மதுறு ஓயா குடியேற்றத்திட்டங்கள் வெற்றி பெற்றிருக்குமானால், தமிழீழக் கோரிக்கையின் அடிப்படையை அழித்திருப்போம் எனக் குறிப்பிட்டது இங்கு குறிப்பிடத்தக்கது.

> **எல்லைப் புறங்களை நாங்கள் ஆக்கிரமிக்காது போனால், எல்லைகள் எம்மை நோக்கி வந்துவிடும்.**
>
> J. R. ஜெயவர்த்தனா

## கிழக்கு

கிழக்கு மாகாணத்தில்: 1881 இல் 59.1 வீதமாக இருந்த தமிழர்கள் 1981 இல் 41 வீதமாக குறைந்துள்ளனர்.

1881 இல் 4.7 வீதமாக இருந்த சிங்களவர்கள் 1981 இல் 24.9 வீதமாக அதிகரித்துள்ளனர். (1981 ற்குப் பின் குடிசன மதிப்பீடு எடுக்கப் படவில்லை)

1881 இல் 100 தமிழருக்கு 8 சிங்களவர் என்ற வீதத்தில் இருந்த நிலை, தொடர்ச்சியான திட்டமிட்ட சிங்கள குடியேற்றங்களின் மூலம் மாற்றியமைக்கப்பட்டன. 1981 இல் 100 தமிழருக்கு 61 சிங்களவர் என்ற நிலை உருவாக்கப்பட்டுள்ளது. கிழக்கைத் துண்டாடும் நடவடிக்கைகளாக அமைந்த மகாவலி அபிவிருத்தித் திட்டம், பொருளாதார அபிவிருத்தித் திட்டம் என்பன பௌத்த கலாச்சார அபிவிருத்தித் திட்டங்களாகவும் வெளிப்பட்டன.

விரைவுபடுத்தப்பட்ட மகாவலி அபிவிருத்தித் திட்டம் B பகுதியில் 43 புத்த விகாரைகளும், C பகுதியில் 41 புத்த விகாரைகளும் அமைக்கப்பட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது

இன்று இத்தகைய இரகசிய செயற்பாடுகள், வெளிப்படையாக இராணுவ உதவியுடன் மேற்கொள்ளப்படுகின்றன. தமிழ் மக்களின் சொந்த இடங்களில் இருந்து பலாத்காரமாக வெளியேற்றப்பட்டு, மேற்கொள்ளப்படும் நிலப்பறிப்பு, குடியேற்றத் திட்டத்திற்கு சர்வதேச பொருளாதார உதவி பயன்படுத்தப்படுவது குறிப்பிடத்தக்கது.

> **ஒரு குடியேற்றத்திட்டம் நிரந்தர இராணுவ முகாமிற்கு ஒப்பானதும், பாரிய விளைவைத் தரவல்லதுமாகும்.**
>
> மு. திருநாவுக்கரசு

தமிழீழத்தின் எல்லைப் பகுதியான பாணமை நீண்ட காலத்திற்கு முன்பே தமிழ் மக்களிடமிருந்து பறிக்கப்பட்டுள்ளது. இங்கு தமிழ் மக்கள் வாழ்ந்ததற்கான அறிகுறிகளே அழிக்கப்பட்டுள்ளன. அதன் பின் பொத்துவிலில் தமிழ் மக்கள் வாழ்ந்து வந்தனர். இன்று இப்பிரதேசத்தில் தமிழ் மக்கள் இல்லை. இங்கிருந்த தமிழ் மக்கள் இராணுவத்தினாலும், ஊர்காவல் படையினாலும் விரட்டியடிக்கப்பட்டுள்ளனர். இங்கு வாழ்ந்த தமிழ் மக்கள் இடம் பெயர்ந்து கோமாரி கிராமத்தில் வாழ்ந்து வருகின்றனர். 26800 தமிழர் வாழ்ந்து வந்த இப்பிரதேசம் தமிழர்கள் இல்லாத பகுதியாகியுள்ளது. தமிழர்களுடைய உடமைகள் சூறையாடப் பட்டுள்ளதுடன், குடியிருப்புகள் அழிக்கப்பட்டுள்ளன. ஸ்ரீலங்காப் படையினரால் கணவர்மார்கள் கொல்லப்பட்டதனால் 345 பெண்கள் விதவைகள் ஆக்கப்பட்டுள்ளனர்.

அம்பாறை மாவட்டத்தில் 1981 ஆம் ஆண்டு எடுக்கப்பட்ட குடிசன மதிப்பீட்டின் படி 77,725 தமிழ் மக்கள் வாழ்ந்துள்ளனர். ஆனால் தற்போது 36 தமிழ்க் கிராமங்கள் அழிக்கப்பட்டு சாம்பல் மேடாக்கப் பட்டுள்ளது. தொடரும் அரசபயங்கரவாதத்தால் 1,504 க்கும் மேற்பட்ட தமிழ் மக்கள் கொல்லப்பட்டுள்ளனர். ஆயிரத்துக்கும் மேற்பட்ட தமிழ் மக்கள் காணாமல் போயுள்ளனர். தமிழ், முஸ்லீம் மக்கள் வாழ்கின்ற பிரதேசங்களை அண்டி 29 சிங்கள விசேட அதிரடிப் படை முகாம்களும், 05 இராணுவ முகாம்களும், ஒரு கடல் படை முகாமும், 09 பொலிஸ் நிலையங்களும், 06 சிங்கள ஊர்காவல் படை முகாம்களும், 26 முஸ்லீம் ஊர்காவல்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

படை முகாம்களும் அமைக்கப் பட்டுள்ளன.

## மட்டக்களப்பு

கடந்த ஆண்டில் மட்டும் மட்டக்களப்பு, பொலநறுவை எல்லைப் புறத்தில் இருந்த 15 தமிழ்க் கிராமங்கள் இராணுவ உதவியுடன் சிங்களக் குடியேற்றமாக மாற்றப்பட்டுள்ளன. இவற்றில் 6 கிராமங்கள் பொலநறுவை உதவி அரசாங்க அதிபர் பிரிவுடன் இணைக்கப்பட்டுள்ளன.

இராணுவ நடவடிக்கைகளை தொடர்ச்சியாக மேற்கொண்டு தமிழ் மக்களை காடுகளுக்கு விரட்டிவிட்டு, ஆயுதபாணிகளாக்கப்பட்ட சிங்களவர்களை குடியமர்த்தி பாதுகாப்பும் வழங்கப்படுகின்றது.

தமிழ் மக்களின் வீடுகள், சொத்துக்கள், நிலங்கள் சிங்கள, முஸ்லீம்களுக்கு வழங்கப்படுகின்றன. தமிழ் மக்களின் விளை நிலங்கள், இக் குடியேற்ற வாசிகளால் பயிரிடப்பட்டுள்ளன. ஏற்கனவே தமிழ் மக்கள் பயிரிட்டவை, சிங்கள, முஸ்லீம் ஊர்காவல் படையினராலும், இராணுவத்தினராலும் அறுவடை செய்யப் பட்டுள்ளன.

## திருகோணமலை

திருகோணமலையில் சிங்களக் குடியேற்றங்களை ஊக்குவிக்கும் நோக்குடன் துரித அபிவிருத்தியை மேற்கொள்வது என்ற போர்வையில் புதிய திட்டம் ஒன்றை ஸ்ரீலங்கா அரசு வகுத்துள்ளது.

அமைச்சரவையால் நியமிக்கப்பட்ட தொழில் நுட்பக் கமிட்டி, நகர அபிவிருத்தி அதிகார சபையுடன் இணைந்து இதனை நடைமுறைப்படுத்துகின்றது.

திருகோணமலை மாவட்டத்தில் பாலம் போட்டாறு, உப்பாறு, இறால்குழி, ஆலங்கேணி, ஈச்சந்தீவு ஆகிய கிராமங்களில் சிங்களவர்களை குடியேற்றும் நடவடிக்கை துரிதமடைந்து வருகின்றது. இதேவேளை கரையோரப் பகுதிகளில் உருவாக்கப்படும் சிங்களக் குடியேற்றங்களுக்கு ஸ்ரீலங்கா அரசு பூரண வசதிகளை வழங்கி வருகின்றது. வடக்கு - கிழக்கு மீன்பிடித் தொழிலை அபிவிருத்தி செய்ய ஆசிய அபிவிருத்தி வங்கி வழங்கிய 20 கோடியே 80 இலட்சம் ரூபாவைச் செலவிடுவதில் திருமலையில் குடியேறிய சிங்களவர்க்கே முதலிடம் கொடுக்கின்றது ஸ்ரீலங்கா அரசு. அங்கு மீன்பிடித்துறை அமைச்சு அமைக்கப்பட்டுள்ளதுடன், குடியேற்றப்பட்ட சிங்களவர்களுக்கு வீடுகள் அமைத்துக் கொடுப்பதுடன், மின்சாரம், குடிநீர் வசதிகள் செய்து கொடுக்கப்படுகின்றன. திருகோணமலை மாவட்டத்தில் மேலும் பல புதிய சிங்களக் குடியேற்றங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. புதிய இத் திட்டங்களில் சிங்களவர்கள் 70% வும் முஸ்லீம்கள் 25% வும் தமிழர்கள் 5% வும் இருக்கக் கூடியவாறு திட்டமிடப்பட்டுள்ளது.

## மணலாறு

மணலாறு (வெலிஓயா) திட்டம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாக கருதப்படுகின்றது. திருகோணமலை மாவட்டத்தையும், முல்லைத்தீவு மாவட்டத்தையும் நிரந்தரமாகப் பிரித்துவிட மேற்கொள்ளப்படும் இத்திட்டம் விடுதலைப் புலிகளின் தொடர்ச்சியான தாக்குதல்களால் முறியடிக்கப் பட்டு வருகின்றது.

மணலாற்றுப் பகுதியில், ஆயுதபாணியாக குடியேற்ற வாசிகளை குடியமர்த்துவதன் மூலம் திருமலையையும், முல்லைத்தீவையும் பிரித்துவிடும் சிங்கள அரசின் திட்டம் நடைமுறைப்படுத்த முடியாமல் உள்ள போதும், அதற்கென பெரும் படை எடுப்புகள் நடைபெற்று வருகின்றன. அப்பிரதேசத்தை இராணுவ கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து, சில குடியேற்றங்களை மேற்கொள்ள ஸ்ரீலங்கா அரசு தனது இராணுவ வீரர்களையும், யுத்தத் தளபாடங்களையும் தொடர்ந்து இழந்து வருகின்றது.

இந்தப் பிரதேசத்தை எதிரிகளிடம் இருந்து காப்பாற்ற விடுதலைப்புலிகள் உறுதியுடன் போராடிவருகின்றனர்.

## ஸ்ரீலங்கா அரசின் சமாதானக் கதவு

வடக்கு கிழக்கு அபிவிருத்தி என்ற போர்வையில் பெறப்படும் சர்வதேச நிதியுதவிகளை, தமிழீழ மக்களின் அரசியல் அபிலாசைகளையும், நலன்களையும் அழிக்கப் பயன்படுத்தும் ஸ்ரீலங்கா அரசு, ஒரு நேர்மையான ஏற்றுக் கொள்ளக் கூடிய, தமிழ் மக்களின் அபிலாசைகளை பூர்த்தி செய்யும் திட்டத்தை முன்வைக்கும் என எதிர்பார்ப்பது மடமையே.

சிங்கள, முஸ்லீம் ஊர்காவல் படையினரை உருவாக்கி ஆயுத பாணியாக்கி உலாவவிட்டுள்ள ஸ்ரீலங்கா அரசு, ஆயுதம் தாங்கிய குடியேற்ற வாசிகளையும் உருவாக்கி தமிழர் நிலங்களை கபளீகாரம் செய்து வருகின்றது. இந்த நிலையில் சமாதானச் சூழ்நிலை ஒன்று ஏற்படுவது சாத்தியமற்றது. சமாதானக் கதவுகள் அகலத் திறந்துள்ளது என வாய்க்குவாய் உச்சரிக்கும் பிரேமதாசா, சிங்கள இனவாத தலைவர்களின் வழிவந்த அணுகுமுறைகளை கைவிடும் வரை, தமிழ் மக்களிற்கு முன்னால் வைக்கப்பட்டுள்ள பொறியாகவே அவரது அகலத் திறந்த கதவுகள் காட்சியளிப்பது தவிர்க்க முடியாதது. ■

### விளக்கம்.

நிலமற்ற எவரையும் இலங்கையின் எந்தப்பகுதியிலும் குடியமர்த்தலாம். வடக்கு - கிழக்கில் இருந்த பல தமிழ் மக்கள் தெற்கில் வந்து வீடமைத்து குடியேறுகின்றனர். இதை யாரும் தடுக்கவில்லை; அப்படியிருக்க வடக்கு - கிழக்கில் சிங்களவர்கள் குடியேற்றப்படுவதை எப்படித் தடுக்கமுடியும்.

பன்னசிய மகாநாயக்கதேரோ.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## அன்றே சொன்னவை

தலைவர் வே. பிரபாகரன் 1985ம் ஆண்டு ஆங்கில ஏடான "சண்டே"க்கு அளித்த பேட்டியில் இருந்து.

■ **ஒரு அரசியல் தீர்வு ஏற்படவேண்டும் என்பதில் ஜெயவர்த்தனாவுக்கு உண்மையான அக்கறை இருக்கிறதா? அவரது இடத்தில் வேறொரு தலைவர் இருந்தால் பேச்சுக்கள் மூலம் தீர்வு ஏற்படும் சாத்தியம் அதிகரிக்குமா?**

● சிங்களத் தலைமைப் பீடத்தில் மாற்றம் ஏற்பட்டாற் போல இந்தப் பிரச்சனைக்கு தீர்வு ஏற்படுமென நான் நினைக்கவில்லை. மாறி மாறி பதவிக்கு வந்த சிங்கள அரசாங்கங்கள் எம்மை ஏமாற்றித் துரோகமிழைத்தமையை எமது வரலாறு தெளிவாக எடுத்துக் காட்டுகிறது.

■ **தமிழர் இலட்சியத்திற்காக நீண்டகால அடிப்படையில் இரத்தம் சிந்தவும், வன்முறையை எதிர்கொள்ளவும் தயாராக இருக்கின்றீர்களா?**

● நிச்சயமாக. உலகத்தில் எந்த ஒரு நாடும் இரத்தம் சிந்தாமலும் தியாகங்கள் புரியாமலும் சுதந்திரம் பெற்றதில்லை. தமிழராகிய நாம் எமது விடுதலைக்காக உயிரை அர்ப்பணிக்கவும் தயாராக இருக்கின்றோம்.

■ **சில சூழ்நிலைகள் காரணமாக தமிழ் விடுதலைப் போராளிகளுக்கும், இந்திய அரசாங்கத்திற்கும் மத்தியிலான உறவுகள் வெகுவாகப் பாதிக்கப்பட்டு இந்தியா தனது ஆதரவை வாபஸ் பெற்றுக் கொள்கிறது என வைத்துக்கொள்வோம். அப்படியாயின் தனித்து நின்று போராட்டத்தை முன்னெடுத்துச் செல்லும் நிலையில் இருக்கிறீர்களா?**

● எமக்கு வேறெதாவது மாற்று வழியுண்டா? எமது இலட்சியத்தை அடையும்வரை நாம் போராடித்தான் ஆகவேண்டும். இந்தியாவின் அனுதாபம் எமக்கு தார்மீக பலத்தைக் கொடுக்கிறது. ஆனால் இந்தியா தனது ஆதரவை நிறுத்திக் கொள்ளுமாயின் அதனால் எமது விடுதலைப் போராட்டம் நின்றுவிடப் போவதில்லை. இந்தியாவின் ஆதரவுடனோ அல்லது வேறெந்த வெளிநாட்டு சக்திகளின் உதவியுடனோ நாம் எமது போராட்டத்தை ஆரம்பிக்கவில்லை. நாம் சாகும் வரை போராடியே தீருவோம். நான் இறந்துபோக நேருமாயின் இன்னுமொருவர் எமது போராட்டத்தை முன்னெடுத்துச் செல்வார்.

■ **ஸ்ரீலங்காவில் தமிழ் மக்கள் ஒரு இனப்படுகொலைக்கு ஆளாகி வருகின்றனர் என்பதை நீங்கள் உறுதியாக நம்பும் பட்சத்தில், இந்தப் பிரச்சனையைத் தீர்ப்பதில் இந்தியா கையாளக்கூடிய சிறந்த வழி என்ன என்று நினைக்கிறீர்கள்?**

● விடுதலைப் போராளிகளுக்கு உதவி செய்வதன் மூலம் அவர்கள் இந்த இனப் படுகொலையை தடுத்து நிறுத்தலாம். தமிழ் மக்களைப் பாதுகாக்க முயற்சிப்பவர்களுக்கு அவர்கள் உதவலாம். எமக்கு இந்தியாவின் தார்மீக ஆதரவு அவசியம்.

■ **அண்மிய வருங்காலத்தில் என்ன நடக்கலாம் என நினைக்கிறீர்கள்?**

● தமிழீழத்திற்கான போராட்டம் வளர்ந்து நாளுக்கு நாள் உக்கிரம் அடைந்து வருகிறது. தமிழீழத் தனியரசு அமைவது திண்ணம். இந்த வரலாற்று நிகழ்ச்சியை எந்தவொரு சக்தியாலும், அது எத்தனை வலிமை வாய்ந்ததாக இருந்தாலும், தடுத்து நிறுத்தவே முடியாது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# 'த....ண்....ணி தா....ங்....கோ அ..ண்ணை..பெரி..ரிய..கா..ய..மே'

## ஓர் ஆசிரியரின் இறுதி வார்த்தைகள்

நெடுங்கேணியில் 24. 03. 1992 அன்று காலை 8 மணிக்கு இடம் பெற்ற விமானக் குண்டுவீச்சில் பழம்பாசி-மாமடு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையின் ஆங்கில ஆசிரியரான பெரியதம்பி வரத ராசா உயிரிழந்தார். மீண்டும் ஒரு இளம் குடும்பம் சீரழிக்கப்பட்டது.

இந்தச் செய்தி அறிந்து வேத னையோடு தின்னவேலியிலுள்ள ஆசிரியரின் தாயாரது வீட்டைத் தேடினோம். சிவந்த மண்ணின் புழுதி வாசனை இடையிடையே காற்றோடு கலந்து எம்மீது உரசிச் சென்றது. அழுகுரல்கள் வானைப் பிளந்தன; வீட்டை இனங்காட் டின. உறவினர் நண்பர்களின் நெரிசலும், இரைச்சலும் எமது எதிர்பார்ப்பைக் குலைத்தது.

வீட்டிற்குள் நுழைந்ததும் வெள் ளைச் சீலையாலும், பச்சை ஓலையாலும் போடப்பட்ட பந்த லில் ஆசிரியரின் உடலைச்சூழ பெண்கள் கூடியிருந்து ஒப்பாரி வைத்துக் கொண்டிருந்தனர்.

ஆசிரியரின் தம்பியோடு கதைத் தபோது தளதளத்த குரலுடன் பேச ஆரம்பித்தார்.

ஐந்து பெண் சகோதரிகளையும் இரண்டு ஆண் சகோதரர்களை யும் உடைய வரதராசா ஆண் பிள் ளைகளில் மூத்தவர். இவருக்கு தந்தையில்லை. தாய்மட்டும் இருக்கின்றார். இவரது ஒரு பெண் சகோதரி திருமணம் செய்ய வில்லை.

முப்பத்தி நான்கு வயதுடைய வர தராசா திருமணம் செய்து இரண்டு வருடமாகிறது.

இவருக்கு பகலவன் என்ற 3 மாத ஆண் குழந்தை உள்ளது.

எட்டு வருடங்கள் ஆசிரியத் தொழிலைச் செய்த இவர் தொடர்ந்து எட்டு வருடமும் பழம் பாசி-மாமடு அ. த. க. பாடசாலை யில் ஆங்கில ஆசிரியராகக் கட மையாற்றி வந்தார். இவர் தனது மனைவியுடனும், 3 மாதமே நிரம் பிய ஆண் பிள்ளையுடனும் நெடுங் கேணியில் வாடகைக்கு வீடமர்த்தி வாழ்ந்து வந்தார். சம்பவம் நடந்த அன்று வீட்டிற்குப் பொருள்கள் வாங்கவெனக் காலை 8 மணிக்குச் சந்தைக்குச் சென்றார்.



ஆசிரியர்
வரதராஜா

வானத்து அரக்கர்கள் அந்தப் பகு தியில் வட்டமிட ஆரம்பித்தனர். இதைப்பார்த்த மக்கள் அச்சத் தால் கிலிகொண்டு ஓட ஆரம்பித் தனர். வானத்திலிருந்து பூமியை நோக்கிக் குண்டுவீச்சு விமானம் வருவதைப் பார்த்த மக்கள் விழுந்து படுக்க முன்னர் வெடித்த குண்டின் ஒரு துண்டு வரதராசா வின் இடுப்பைக் கிழித்தது. இரத் தம் வெளியேறத் தொடங்கியது. தமது கொடூரச் செயல்களை முடித்த விமானங்கள் திரும்பிய தும் ஓடி ஒளித்த மக்களில் சிலர் ஆசிரியரைத் தூக்கினர்.

"த..ண்..ணி தா..ங்..கோ..." ஆசிரியரின் இறுதி வார்த்தை யென்று எண்ணியவர்கள், குளுக்கோசும் இளநீரும் கொடுத் தார்கள். அவையே அவரின் நாக்கை நனைத்த இறுதி உணவுப் பொருள்கள்.

"அண்ணை... பெரிய... காயமோ" மீண்டும் வரதராசாவின் ஈனக் குரல். வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்படும் வழியி லேயே உயிர் பிரிந்தது. பின் 24ம் திகதி இரவு 1 மணியளவில் உயி ரற்ற உடலும் மனைவியும் பிள் ளையும் தின்னவேலியிலுள்ள ஆசிரியரது தாயின் வீட்டைச் சேர்ந்தனர். இவ்வாறு கூறிய இவரது தம்பி விக்கி, விக்கி அழத் தொடங்கினார். இதன் பின் அவரிடம் எதுவும் கேட்க விரும்ப வில்லை. மனைவியோ துவண்டு போயிருந்தார். அவரிடம் எதையும் கேட்பது என்பது வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவதற்கொப்பானது என்று கருதி தவிர்த்துக் கொண் டோம்.

"இன்றைக்கு வாறனெண்டு சொல் லிப் போட்டு போனனி இப்படி வந்திருக்கிறியேடா"

"இதை நினைச்சோடா சொல்லிப் போட்டு போனனி"

"ஐயோ..... இரவு வந்து மச்சாள் கூப்பிட நீ வந்திட்டாயென்டெல் லோடா ஓடி வந்தனான்"

அந்த வீட்டை விட்டு வெளியேற எண்ணிய எம்மை ஆசிரியரின் மூத்த சகோதரியின் இந்த ஒப்பாரி நெகிழச் செய்தது. கனத்த மனத் துடனும் கலங்கிய கண்களுடனும் வெளியேறினோம். ■

தமிழீழத்திலிருந்து..

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




தமிழீழத்தில்
சர்வதேச மகளிர் தினம்





சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு தமிழீழத்தில் நடத்தப்பட்ட ஓவியக் கண்காட்சியில் வைக்கப்பட்ட ஓவியம்.

www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்